Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்: ஆறு

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | பிரமோதூத ஞூ சித்திரை மீ 15ஆம் உ | சனிக்கிழமை | (28 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷவ்வா 2 | ஓசை 69

## இலங்கைத் தமிழரைப் பிடிக்க நோர்வே பொலிஸார் உசார்!

(ஒஸ்லோ)

போலித் தஸ்தாவேஜுகளுடன் நோர்வே நாட்டுக்குள் நுழைய முயற்சிக்கும் 19 இலங்கைத் தமிழர்களைப் பிடிப்பதற்கு தயார் நிலையில் இருக்கும்படி நோர்வே நாட்டுக் குடிவரவு அதிகாரிகள் புதனன்று நோர்வே பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

நோர்வேயில் ஸ்ரவெஞ்சரில் நங்கூரமிட்டிருக்கும் கிரேக்கக் கப்பலில் ஏறுவதற்கு 19 இலங்கையர்கள் பாரிஸிலிருந்து விமான மூலம் வருவதாக ஒரு கப்பல் கொம்பனிக்கு வந்த ரெலெக்ஸ் செய்தி ஒன்றை ஒட்டியே மேற்படி அறிவிப்பு விடப்பட்டுள்ளது. இதேவேளை நோர்வே குடிவரவு இலாகா மேற்கொண்ட விசாரணைகளின் போது ரெலெக்ஸ் செய்தி வந்ததாகக் கூறப்படும் கப்பல் கொம்பனி நோர்வேயில் இல்லை எனத் தெரிய வருகிறது.

கொழும்பு, பாரிஸ், லண்டன், கனடா, வழியாக இய (6ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் - அரசு இன்று முக்கிய பேச்சு



## ஆறாவது திருத்தச்சட்ட நீக்கம் மாகாணசபைக் கலைப்பு

### பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சங்கள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவும், இலங்கை அரசின் பிரதிநிதிகளும் இன்று காலை கொழும்பில் சந்திக்கவுள்ளார்கள் இந்த சந்திப்பைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் குழுவினர் ஜனாதிபதி ஆர், பிரேமதாசாவையும் சந்திக்கலாம் எனவும் தெரியவருகின்றது.

இவ் விடுதலைப் புலிகள் உயர் மட்டக்குழுவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி உட்பட இன்னும் சில முக்கியஸ்தர் பங்குபற்றுவார்கள் இலங்கை அரசு தரப்பில் நீதி அமைச்சரும் சமாதானக் குழுவின் தலைவருமான ஏ. சி எஸ் ஹமீத்தின் தலைமையில் ஓர் உயர் மட்டக்குழு பங்குபற்றும் எனத் தெரிகின்றது.

இச் சந்திப்பின்போது முக்கியமான பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைப்பு, தேர்தல். பொலிஸாரின் அத்துமீறல். பொலிஸ் படைக்கு

களும், இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினையும் ஆராயப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கம், மாகாணசபை கலைப்பு ஆகிய இரு விடயங்களிலும் விடுதலைப் புலிகள் தரப்பினர் மிகவும் தீவிர கவனம் செலுத்துவார்கள் எனத் தெரிகின்றது. அத்தோடு வடக்கு-கிழக்கில் பொலிஸாரின் அத்துமீறல்கள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்படலாம் எனவும் தெரிகின்றது.



## வட-கிழக்கு

## பல வருடங்களின்பின் ரம்ழான் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று முஸ்லிம் மக்கள் ரம்ழான் பெருநாளை பெருமகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள்,

வடக்கு கிழக்கு பகுதிகளில் கடந்த ஏழு வருடகாலத்துக்குபின்னர் இம்முறை இப்பெருநாள் சிறப்பாக நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

தென்பகுதியிலும் அண்மைக்கால ஜே. வி. பி. நடவடிக்கைகளால் கடந்தமுறை இவை நடைபெற முடியவில்லை. இம்முறை இந்தப் பகுதிகளிலும் இப்பெருநாளை முஸ்லிம்கள் நன்கு கொண்டாடினார்கள்.

## மே 7 இல் கிராமிய வீடமைப்பு கடன் படிவங்கள் விநியோகம்

(சுண்டிக்குளி)

15லட்சம் வீடமைப்புத்திட்டத்தின்கீழ் கிராமிய வீடமைப்புக்கடன் பெறுவதற்கான படிவங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் எதிர்வரும் மே 7 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளன,

நல்லூர், சாவகச்சேரி, மருதங்கேணி, பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை வேலணை, நெடுந்தீவு ஆகிய உப அரசாங்க அதிபர் பிரிவுகளில் இப்படிவங்கள் வழங்கப்படும்

(61)

## நிறுவனங்கள், கூ.தாபனங்கள் மக்கள் மயமாக்கப்படவுள்ளன

(கொழும்பு)

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ள வர்த்தக நிறுவனங்களும், அரசாங்கத்துறை கூட்டுத்தாபனங்களும் மக்கள் மயமாக்கப்படவுள்ளன.

இந்தநிறுவனங்களின்மொத்தப் பங்குகளில் பத்துசதவீதம் ஊழியர்களுக்கு வழங்கப்படும்

உற்பத்தியை அதிகரித்து நிர்வாக முறையை ஒருமுகப்படுத்தவும், ஊழியரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமே இதன் குறிக்கோளாகும் என்று தொழில் அமைச்சர் பிரேமச்சந்திரா தெரிவித்தார்

## யாழ். செயலக வங்கிக் கிளை திறப்பதற்கான முயற்சி தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக வங்கிக் கிளையை மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றது.

இதற்கு ஏற்றவாறுவங்கிக்கு என புதியதொரு அறை ஒதுக்கப்பட்டு அவ்வறை திருத்தப்பட்டு வருகிறது.

அடுத்த மாதமளவில் இவ் வங்கிக்கிளை மீண்டும் இயங்குவதற்கான ஏற்பாடுகள் நிறைவுபெறும் என செயலக அதி

## ஏழுபேரின் கோரிக்கைக்காக அ.புரவில் நகை மீளளிப்பு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மக்கள் வங்கியில் வைக்கப்பட்ட அடைவு நகைகளை அநுராதபுரத்தில் வைத்துக் கையளிக்கும்படி நாயாற்றுக் கரையோரக் குடியேற்றவாசிகள் ஏழுபேர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இது தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு மக்கள் வங்கி முகாமையாளரை அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா பணித்துள்ளார்.

அடகு வைத்த நகைகளைக் கொழும்பில் வைத்

## யூ. என். எச். சி. ஆர். 40மீன்பிடி படகுகள் அன்பளிப்பு

தொடர்ந்து விடுதலைப் புலிகள் குழுவினர் ஜனாதிபதி ஆர், பிரேமதாசாவையும் சந்திக்கலாம் எனவும் தெரியவருகின்றது.

இவ் விடுதலைப் புலிகள் உயர் மட்டக்குழுவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி உட்பட இன்னும் சில முக்கியஸ்தர் பங்குபற்றுவார்கள் இலங்கைஅரசு தரப்பில் நீதி அமைச்சரும் சமாதானக் குழுவின் தலைவருமான ஏ.சி எஸ் ஹமீத்தின் தலைமையில் ஓர் உயர் மட்டக்குழு பங்குபற்றும் எனத் தெரிகின்றது.

இச் சந்திப்பின்போது முக்கியமான பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைப்பு, தேர்தல். பொலிஸாரின் அத்துமீறல். பொலிஸ் படைக்கு ஆட்சேர்ப்பு, வன்முறைகளால் கிழக்கு மாகாணத்தில் குடிபெயர்ந்து சென்ற தமிழரைக் குடியமர்த்தல் போன்ற விடயங்களுடன் அண்மையில் ஏற்பட்ட அரசின் மாற்றங்களும், இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினையும் ஆராயப்படலாம் எனவும்

தீவிர கவனம் செலுத்துவார்கள் எனத் தெரிகின்றது. அத்தோடு வடக்கு-கிழக்கில் பொலிஸாரின் அத்துமீறல்கள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்படலாம் எனவும் தெரிகின்றது.

# நிறுவனங்கள், கூ.தாபனங்கள் மக்கள் மயமாக்கப்படவுள்ளன

(கொழும்பு)

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ள வர்த்தக நிறுவனங்களும், அரசாங்கத்துறை கூட்டுத்தாபனங்களும் மக்கள் மயமாக்கப்படவுள்ளன.

இந்தநிறுவனங்களின்மொத்தப் பங்குகளில் பத்துசதவீதம் ஊழியர்களுக்கு வழங்கப்படும்

உற்பத்தியை அதிகரித்து நிர்வாக முறையை ஒருமுகப்படுத்தவும், ஊழியரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமே இதன் குறிக்கோளாகும் என்று தொழில் அமைச்சர் பிரேமச்சந்திரா தெரிவித்தார்



# யாழ். செயலக வங்கிக் கிளை திறப்பதற்கான முயற்சி தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக வங்கிக் கிளையை மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றது.

இதற்கு ஏற்றவாறுவங்கிக்கு என புதியதொரு அறை ஒதுக்கப்பட்டு அவ்வறை திருத்தப்பட்டு வருகிறது.

அடுத்த மாதமளவில் இவ் வங்கிக்கிளை மீண்டும் இயங்குவதற்கான ஏற்பாடுகள் நிறைவுபெறும் என செயலக அதிகாரிகள தெரிவிக்கின்றனர்.

தற்போது மக்கள் வைத்தியசாலை வீதி வங்கிக்கிளையில் தமது பணத்தை செலுத்திவிட்டு கச்சேரிக்கு வந்து தமது ரசீதுகளை சமர்ப்பிக்க வேண்டிய நிலை இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்

(லோ)

# ஏழுபேரின் கோரிக்கைக்காக அ.புரவில் நகை மீளளிப்பு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மக்கள் வங்கியில் வைக்கப்பட்ட அடைவு நகைகளை அநுராதபுரத்தில் வைத்துக் கையளிக்கும்படி நாயாற்றுக் கரையோரக் குடியேற்றவாசிகள் ஏழுபேர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இது தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொளளுமாறு முல்லைத்தீவு மக்கள் வங்கி முகாமையாளரை அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா பணித்துள்ளார்.

அடகு வைத்த நகைகளைக் கொழும்பில் வைத்துத்தருமாறு தமிழர் கேட்டபோது, அக் கோரிக்கையை மறுத்த அரசாங்கம், ஏழுபேர்களுக்காக நகைகளை அநுராதபுரத்தில் வைத்துக் கொடுக்கும் நடவடிக்கை பாரபட்சமான செயல் என்று முல்லைத்தீவு மக்கள் பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள். (58)

# யூ. என். எச். சி. ஆர். 40 மீன்பிடி படகுகள் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

வன்செயலால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மீனவர்கள் 40 பேருக்கு மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்படவுள்ளன.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழுகின்ற மிக வறிய மீனவர்களுக்கு வழங்குவதற்காக ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலய அகதிகள்புனர் வாழ்வுப் பகுதியினாலும் (யூ. என். எச். சி. ஆர்) வட-கிழக்கு மாகாண சபையினாலும் இவ் வள்ளங் வழங்கப்படவுள்ளன.

இவற்றில் இயந்திரத்துடனும் வலைகளுடனும் கூடிய வள்ளங்களை 15 பேருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட கடல் தொழில் விரிவாக்க அதிகாரி திரு. ஏ. ஆர். இ. ஜெயரெத்தினம் ஈடுபட்டுள்ளார். அவர் இது சம்பந்தமாக ஈழநாதம் பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது-

இது தவிர இயந்திரம் பூட்டப்படாத 20 மீன்பிடி வள்ளங்களும் எம்மிடம் உள்ளன இவையும் வெகு விரைவில் பாதிக்கப்பட்ட மீனவர்களு

(6ஆம் பக்கம் பார்க்க)

# நகைக்கடை உரிமையாளர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று நடைபெறவிருந்த நகைக்கடை உரிமையாளர்

( 6ஆம் பக்கம் பார்க்க )

# கோட்டைக்குள் மாணவர் செல்ல தமிழ் பொலிஸ் அதிகாரி தடை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். கோட்டைக்குள் மாணவர்கள் சென்று பார்ப்பதற்கு அனுமதிக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் நேற்று பாடசாலை மாணவர்கள் சிலர் யாழ். கோட்டைக்குள் பார்வையிடுவதற்கு அனுமதி கேட்டிருந்தனர்.

இவர்களுக்கு இராணுவ அதிகாரிகள் அனுமதி வழங்கியிருந்த போதிலும் தமிழ் பொலிஸ் அதிகாரிகள் இவர்களை மறித்து திருப்பி அனுப்பிவிட்டதாக முறையிட்டுள்ளனர்.

இம் மாணவர்கள் மேலும்

(6-ஆம் பக்கம் பார்க்க)

# ஜே. வி. பி. தீவிரவாதிகளுக்கு ஆயுள் சிறைத்தண்டனை

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதியைச் சேர்ந்த கிட்டத்தட்ட நாலாயிரம் முதல் ஐயாயிரம் வரையிலான ஜே.வி.பி. தீவிரவாதிகளுக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

இதற்காக இலங்கை நாட்டுச் சட்டங்கள் திருத்தப்பட்டு, அவர்கள் கட்டுக்காவல் மிகுந்த சிறைச்சாலைக்குள் அடைக்கப்படுவார்கள். இந்தத் தகவலை இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரெட்ணா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## அ. ஐ. நா. உயர் ஸ்தானிகராலய உதவி

# 1350 வீடுகள் புனர் நிர்மாணம்; 563 வீடுகள் பூர்த்தி

(சுண்டிக்குளி)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய (U. N. H. C. R.) உதவி மூலம், யாழ். மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் 15,000 ரூபா செலவில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள 1350 வீடுகளுள் இதுவரையில் 563 வீடுகளின்நிர்மாணவேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

இதுவரை பூர்த்தியாக்கப்படாத வீடுகளை பூர்த்தியாக்குவதற்கான துரித நடவடிக்கைகளை யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

வீடமைப்பு நிவாரண உதவி பெறும் 1350 பேரில், 800 பேர் இந்தியாவில் இருந்து திரும்பிய அகதிகள். மிகுதி 550 பேர் உள்ளூரில் பாதிக்கப்பட்டவர்கள்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட 95 வீடுகளுள் 48 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள141 வீடுகளுள் 46 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட 123வீடுகளுள் 51வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 299 வீடுகளுள் 163 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட 119 வீடுகளுள் 76 வீடுகள் பூர்த்தி யாக்கப்பட்டுள்ளன.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 23 வீடுகளுள் 07 வீடுகள் பூர்த்தியாக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சையில்

# சித்தியடைந்தோருக்கு தேசிய பாடசாலையில் இடமில்லை

(காங்கேசன்துறை)

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தும் பாடசாலை அனுமதி இதுவரையும் கிடைக்காததினால் மாணவர்களும், பெற்றாரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

யாழ் நகரில் பிரபல்யமான பாடசாலைகளும், தேசியப் பாடசாலைகளுமான வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் சேருவதற்காக விண்ணப்பித்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது

(6ம் பக்கம் பார்க்க)

# மாகாண, மத்திய அரசின்கீழா என்பதில் ஆசிரியர் சங்கடம்

(காங்கேசன்துறை)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழா அல்லது மத்திய அரசின் கீழா வேலை செய்வது சிறந்தது என்பதைத் தீர்மானிக்கமுடியாத அளவில் வடக்கு - கிழக்குப் பகுதிப் பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும் குழம்பிய நிலையில் உள்ளனர்.

கல்வித்திணைக்களம் கோட்டக்கல்வி அதிகாரிகளூடாகவும் கொத்தணி அதிபரூடாகவும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு இது பற்றிய விருப்பம் கேட்டு ஒப்படைக்கப்பட்டுள்ள 'விடுவிக்கும் அனுமதிக்கான' விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தியாக்க முடியாத நிலையில்

(6ம் பக்கம் பார்க்க)

# 87 பேர் புலிகளால் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய இராணுவத்தையும், ஏனைய இயக்கங்களையும்சேர்ந்த தடுத்து வைக்கப்பட்டிருந்த87 பேர் இன்று விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யவுள்ளனர். புங்குடுதீவிலும் யாழ்ப்பாணத்திலும் வைத்து விடுதலை செய்யப்படவுள்ளார்கள்.

# பதவி மாற்றத்தால் கமநல சேவைகள் பாதிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனேக பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர்களும், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களும் அண்மையில் கிராம சேவையாளர்களாகப் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் கமநல சேவைகள் திணைக்கள வேலைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது,

நெற் காணிப் பயிர்காப்புவரி, சந்தா என்பன பயிர்ச்செய்கை ஊழியர்கள் மூலம் அமுல் செய்யப்பட்டு வந்தது. முன்னர் இந்தக் கடமைகளையும் இவர்களே பொறுப்பேற்றுச் செய்து வருவதற்குச் சில தினங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது,

எனினும் தற்சமயம் கிராம சேவை வேலைகளையே கூடுதலாகச் செய்யவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதால் பெரும்பாலான பொதுமக்கள் தமது கமத்தொழில் விவசாய வேலை

(6-ஆம் பக்கம் பார்க்க)

# சைக்கிள் ஓட்டப் போட்டி; வீரர்கள் 15 பேர் காயம்

(மாத்தளை

1990 ஆம் ஆண்டு சமாதான சைக்கிள் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட வீரர்களில் பதினைந்து பேர் விபத்தில் சிக்கியதால் காயமடைந்தனர்.

ஏழுபேர் படுகாயங்களுடன் மாத்தளை பெரியாஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளனர் பார்வையாளர்களில் ஒருவர் திடீரென வீதிக்கு குறுக்கே போனதாலேயே இந்தவிபத்து ஏற்பட்டது.

# இன்று வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இன்று வலிகாமம் பகுதியில் உள்ள வாகனங்களுக்கு விடுதலைப்புலிகளால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது. இவ் அனுமதிப்பத்திரம் மனோகராத் திரையரங்கிற்கு அண்மையில் உள்ள விடுதலைப்புலிகளின் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பத்தை இக் காரியாலயத்தில் காலை 8 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் பெற்றுக்கொள்ளலாம்.

நாளை பிரதானமாக தனியார் போக்குவரத்து வாகனங்களுக்கே அனுமதி வழங்கப்படவுள்ளதும்குறிப்பிடத்தக்கது

வரிவிளம்பரம்

விருப்பநோக்கு

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M.G.M 777, K.K.S Road Jaffna (B-768)

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna. B/538

சஞ்சிகை ஓடர்

மீண்டும் ஈழநாதம், மங்கை, அம்புலி மாமா, ஆனந்த விகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினமாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், யூனியர் போஸ்ட், இந்தியாருடே (தமிழ் - ஆங்கிலம்), FRONT LINE, SPORT STAR மற்றும் ஏனைய எல்லா இலங்கை, இந்திய சஞ்சிகைகளும் மீண்டும் பதிவு செய்யப்படுகின்றன V.P.Pயிலும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீ காந் புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். (B.825)

JAFFNA CHESS ACADEMY

Learning or to Improve your chess play call at 161, Brown Road, JAFFNA. (R/436)


## சீனாவில் பூகம்பம் 115 பேர் பலி

(பீக்கிங்)

சீனாவின் குவிங்காங் பிராந்தியத்தில் நடந்த பூமி அதிர்ச்பில் 115 பேர் உயிர் இழந்துள்ளனர்.

இடிபாடுகளின் மத்தியில் இருந்து 109 சடலங்கள் இதுவரையில் மீட்புப் பணியினரால் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் ஆயிரக் கணக்கான கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. 160 பேர் வரை காய

### இந்திய இராணுவ நடவடிக்கையால்

## ஊனமுற்றோருக்கு சர்வோதயம் முச்சக்கரவண்டி அன்பளிப்பு

(விசேட நிருபர்)

'அமைதிகாக்க இந்தியாவில் இருந்து வந்தவர்களால் நடத்தப்பட்ட அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இயற்கையான போலியோ போன்ற கொடுமைகளால் அவயவங்கள் செயற்படாதவர்களுக்கும் யாழ். சர்வோதய அமைப்பு இந்த முச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது பாராட்டப்பட வேண்டியது.

இவ்வாறு யாழ், சர்வோதய வளவில் நடைபெற்ற முச்சக்கர வண்டிகள் வழங்கும் வைரவத்தில் யாழ். சுகாதாப வைத்திய அத்தியட்சகரின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட டாக்டர் கே. கிருஷ்ணராஜாகூறினார்.

சர்வோதயத்திற்கு விண்ணப்பித்திருந்த அங்கவீனர்களில் தெரிவு செய்யப்பட்ட பத்துப்பேருக்கு மூச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

வண்டிகளை உரியவர்களுக்குக் கையளித்துப்பேசிய டாக்டர் கே. கிருஷ்ணராஜா மேலும் கூறியதாவது:-

'செயல் இழந்தவர்கள் இந்த உதவிகளைப் பெற்று சுயமுயற்சிகளில் முன்னேற வாய்ப்புண்டு. அங்கவீனர்களும் வாழவேண்டும். அவர்கள் இன்னொருவரின் தயவில் வாழாமல் சுயமுயற்சியை வளர்த்து அதன்மூலம் தமது வாழ்நாளைச் சிறப்பாக்க வேண்டுமென்பதற்காகவே இவ்வுதவிகள் வழங்கப்படுகின்றன' என்றார். (21)

## அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுபட்டினசபைக்கு உட்பட்ட கிராமமான வண்ணாங்குளம் மீனவ மக்கள் முப்பது வருடங்களாக தொடர்ந்து வசித்து வந்த போதும் இதுவரையில் அவற்றுக்கு உறுதிகள் வழங்கப்படவில்லை.

இதன்காரணமாக இப்பகுதி வாழ் மக்களுக்கு நிவாரணம் மற்றும் உதவிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து அரசாங்க அதிகாரிகளுக்கு முல்லைத்தீவு அன்னையர் முன்னணியினர் விடுதலைப் புலிகள் மூலம் தொடர்பு கொண்டுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்க அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## அம்பாறை எல்லைப் பகுதியில் புதிய பொலிஸ் தடை முகாம்கள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில், அம்பாறை நகரின் எல்லைப் புறங்களில் திடீரென பல வீதி தடைமுகாம்கள் பொலிசாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று வழமையாக இருந்த வீதித் தடைமுகாம்களும், பொலிஸ், இராணுவ முகாம்களும் பலப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அக்கரைப்பற்று-அம்பாறை வீதியில், கல்மடு சந்தியிலும் சீனித்தொழிற்சாலை அமைந்துள்ள இங்குராணையில் இரண்டு தடுப்பு முகாம்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இதே வேளையில், இவ்வாறுபுதிதாக வீதித் தடை முகாம்கள் ஏற்படுத்தப்படுவதும், ஏனைய பாதுகாப்பு முகாம்கள் பலப்படுத்தப்பட்டுக் கொண்டு வருவதை இட்டும் இப்பகுதி வாழ் தமிழ்பேசும் மக்கள் கவலை கொண்டுள்ளனர். (48)

### கடற்படையிடம் புகார்

## மீன் பிடிக்க சென்றவர்கள்

## வட, கிழ. மாகாணசபை ஊழியர்களுக்கு முற்பணம் வழங்கப்பட வில்லை

(அம்பாறை)

அரச ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த சம்பள முற்பணங்களான, 3 மாத கஷ்ட நிவாரண முற்பணம் 6 மாத முற்பணமாகவும், மோட்டார் சைக்கிள், துவிசக்கரவண்டி, கார் ஆகியன கொள்வனவு செய்வதற்கான முற்பணங்கள் கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. ஆனால் வடகிழக்கு மாகாணசபைப் பிரதேசத்திற்குள் கடமை புரியும் அரச ஊழியர்களுக்கு இம்முற்பணங்கள் எவையும் வழங்க எதுவித நடவடிக்கையும் எடுக்காமை இப்பிரதேச ஊழியர்களுக்கு வியப்பையும் விசனத்தையும் கொடுத்துள்ளது.

இக்கொடுப்பனவு சம்பந்தமாக ஊழியர்கள் திணைக்களத் தலைவர்களை வினவிய பொழுது இவ்வாறான கொடுப்பனவுகள் எதுவும் செய்ய வேண்டாம் என மாகாண நிருவாகப் பணிப்புரை விடுத்துள்ளதாகவும், முற்பணம் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது.

மாகாணசபை நிருவாக அதிகாரிகளிடம் வினவப்பட்ட பொழுது, மத்திய அரசு இதற்கான நிதி ஒதுக்கீட்டைநிறுத்தி வைத்துள்ளமைதான் இதற்குக் காரணம் என பதில் கிடைக்கிறது.

ஆனால் மத்திய அரசு நிருவாகத்தின் கீழ் நேரடியாக இயங்கும் கச்சேரி நீர்பாசனத் திணைக்களம் போன்ற பிரிவுகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இக் கொடுப்பனவுகள் தடையின்றிநடைபெறுவதாக அறியப்படுகிறது. (48)

## ஓய்வூதியத்தில் மாற்றம்

(கொழும்பு)

வெசாக், பொசன் பண்டிகைகளை முன்னிட்டு மே, ஜூன் மாதங்களுக்கான ஓய்வூதியத்தை குறிப்பிடப்பட்ட திகதிகளுக்கு முன் கூட்டியே வழங்குவதற்கு ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய திகதிகளின் படி மே மாத ஓய்வூதியம் 7ஆம் திகதியும், யூன் 5ஆம் திகதியும் வழங்கப்படும் என்றும் ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 40ஆவது ஆண்டுவிழா

(பண்டத்தரிப்பு)

மாசியப்பிட்டி சூரியோதய சனசமூக நிலையத்தின் 40ஆவது வருடாந்த விழா நாளை ஞாயிற்றுக்கிழமை 4 மணிக்கு நடைபெறுகின்றது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க. சிவசம்பு நிலையக்கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைக்கின்றார்.

சிறப்பு நிகழ்ச்சியாக 60, 000 ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தை யாழ் மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திரு எஸ் டிவகலால திறந்து வைப்பார்

## முல்லைத்தீவு டிப்போவுக்கு புதியபஸ்கள் வரவில்லை

(முல்லைத்தீவு)

வடபிராந்தியப்போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு டிப்போவுக்கு 1986-இல் இருந்து புதிய பஸ் வண்டிகள் எதுவுமே வழங்கப்படவில்லை என டிப்போ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இங்குள்ள பதினொரு பஸ்களும் உதிரிப்பாகங்கள் இன்றி சேவையிலீடுபடுத்த முடியாத நிலையில் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

பழைய டிப்போவில் பொறியியலாளர் பகுதியும் புதிய டிப்போவில் செயலாற்றும்பகுதியும் இயங்குகின்றன. பழைய டிப்போ இராணுவ முகாமுக்கு அருகில் இருப்பதால் இரவு நேரம் திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இதனால் கூடுதலான நேரத்தை செலவிட்டு பஸ்களைத் திருத்தமுடியவில்லை போதிய பொறியிலாளரும் இங்கு இல்லை.

## றொனி டி மெல்லின் மீது மோசடி வழக்கு

(கொழும்பு)

றொனி டீமெல்லின் மீது மற்றொரு நம்பிக்கை மோசடிக் குற்றவழக்கு கொழும்பு உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

றொனி டீமெல்லுக்கெதிரான சாட்சியங்களாக திறைசேரியில் உதவிக் காரியதரிசி ஜி. குமாரதுங்க உள்ளகக் கணக்காளர் பிரிவுகளைச் சேர்ந்த பதில் பணிப்பாளர்

### தமிழ் இளைஞர் ஒன்றியம்

(அம்பாறை)

அம்பாரை மாவட்டத்தில் உள்ள சகல தமிழ் கிராமங்களிலும் உள்ள தமிழ் இளைஞர்களை ஒன்றினைத்து அம்பாரை மாவட்ட தமிழ் இளைஞர் சமூக, பொருளாதார, கல்வி, அரசியல். அபிவிருத்தி ஒன்றியம் என்னும் பெயரில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள தமிழ் இளைஞர்களின் சமூக அமைப்புக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி வளர்த்திக்கும், அரசியல் விடிவிற்கும் ஒன்றுபட்டு உழைப்பதே இவ்வமைப்பின் முக்கிய கடமையாகும். என இதன் தலைவர் எம். ரவீப்திரன் தெரிவித்தார். (48)


யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்ஸர்-யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
கண்ணன் வருவான்
(புதிய பிரதி)

மனோகரா - (யாழ்
தினசரி 4.00, 6.45, 9.45
ஜெய்சங்கர் ராஜஸ்ரீ நிர்மலா நாகேஸ் நடித்த
நீதிதேவன்
புதிய பிரதி

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்) ராதா, நதியா
105 நாள் வெற்றிநடைபோடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)


## தமிழீழ இணக்க மன்று

தமிழீழப் பகுதியில் பல வருடங்களாக நடந்த போரினால் சட்டம், ஒழுங்கு முறையாகப் பேணப்படவில்லை.

சட்டம், ஒழுங்கு ஓரளவுமுறையாகப்பேண அமைக்கப்பட்டவைகளே தமிழீழ இணக்க மன்றுகள் ஆகும். (இணக்க அவைகள்)

இந்த இணக்க மன்றுகள் மூலம் மக்கள் பெருமளவில் பயனடைந்தார்கள்.

1. அந்தந்த ஊரில் வாழ்ந்துவருபவர்களுக்கும், ஊரின் நிலைமையை முழுமையாக நன்கறிந்தவர்களும், மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களுமே மன்றில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

அதனால் பிணக்குகளை அவர்கள் எளிதில் விளங்கி குறுகிய காலத்தில் நீதி வழங்கினார்கள்.

2. பெருமளவில் பணத்தைச் செலவழித்து நேரத்தையும் செலவழித்து அரச நீதி மன்றம் சென்று பிணக்குகளுக்கு தீர்வு காணவேண்டிய தேவைகள் இருக்கவில்லை.

Learning or to Improve
your chess play call at
161, Brown Road,
JAFFNA.

(R/436)

## சீனாவில் பூகம்பம் 115 பேர் பலி

(பீக்கிங்)

சீனாவின் குவிங்காங் பிராந்தியத்தில் நடந்த பூமி அதிர்ச்பில் 115 பேர் உயிர் இழந்துள்ளனர்.

இடிபாடுகளின் மத்தியில் இருந்து 109 சடலங்கள் இதுவரையில் மீட்புப் பணியினரால் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் ஆயிரக் கணக்கான கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. 160 பேர் வரை காயமடைந்துள்ளனர். இவை பற்றிய மெலதிக விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

## பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சர்வோதய சிரமதானஇயக்கம் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி நெறி வகுப்பை அரியாலை சனசமூக நிலையத்தில் நடாத்தி வருகின்றனர்.

## வாசுதேவா விளக்கம்

(கொழும்பு)

எதிர்வரும் மேதினக் கூட்டத்தைதனியாகநடத்தவேண்டிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளதாகநவசமசமாஜக்கட்சிதலைவர்களான வாசுதேவ நாணயக்கார, விக்ரமபாகு கருணாரத்தினா செய்தியாளர்களிடம் விபரமாக கூறினார்கள்.

## தண்டபாணி தேசிகர் காலமானார்

(சென்னை)

இசைமேதை எம். எம். தண்டபாணிதேசிகர் தமது 85 ஆவது வயதில் கடந்த புதன் காலமானார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சிலகாலம் பணியாற்றிய இவரிடம் பல ஈழமாணவர்கள் கல்வி பயின்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பக்தநந்தனன் படத்தில் நந்தனாராக நடித்த இவரது 'தாமரைப்பூத்ததடாகமடி' என்ற பாட்டு கர்நாடக இசையுலகில் பிரபல்யமானது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில், அம்பாறை நகரின் எல்லைப் புறங்களில் திடீரென பல வீதி தடைமுகாம்கள் பொலிசாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோன்று வழமையாக இருந்த வீதித் தடைமுகாம்களும், பொலிஸ், இராணுவ முகாம்களும் பலப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அக்கரைப்பற்று-அம்பாறை வீதியில், கல்மடு சந்தியிலும் சீனித்தொழிற்சாலை அமைந்துள்ள இங்குராணையில் இரண்டு தடுப்பு முகாம்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இதே வேளையில், இவ்வாறுபுதிதாக வீதித் தடை முகாம்கள் ஏற்படுத்தப்படுவதும், ஏனைய பாதுகாப்பு முகாம்கள் பலப்படுத்தப்பட்டுக் கொண்டு வருவதை இட்டும் இப்பகுதி வாழ் தமிழ்பேசும் மக்கள் கவலை கொண்டுள்ளனர். (48)

இருந்து புதிய பஸ் வண்டிகள் எதுவுமே வழங்கப்படவில்லை என டிப்போ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இங்குள்ள பதினொரு பஸ்களும் உதிரிப்பாகங்கள் இன்றி சேவையிலீடுபடுத்த முடியாத நிலையில் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

டிப்போ இராணுவ முகாமுக்கு அருகில் இருப்பதால் இரவு நேரம் திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இதனால் கூடுதலான நேரத்தை செலவிட்டு பஸ்களைத் திருத்தமுடியவில்லை போதிய பொறியிலாளரும் இங்கு இல்லை.

### கடற்படையிடம் புகார்

## மீன் பிடிக்க சென்றவர்கள் வீடு திரும்பவில்லை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் ஒரு வாரங்களுக்கு முன் கடலில் மீன் பிடிக்கச் சென்று கரை திரும்பாத இளம் சகோதரர்கள் நிலையினை அறிந்து கொள்வதற்காக பெற்றோர்கள் காரைநகர், திருகோணமலை கடற்படை முகாம்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

மருதங்கேணியைச் சேர்ந்த கறுவல்த்தம்பி ஜெயரஞ்சன், கறுவல்த்தம்பி வாகன் ஆகிய இரு இளம் சகோதரர்களே கடந்த வெள்ளிக்கிழமை இயந்திரப் படகில் மீன் பிடிக்கச் சென்று கரை திரும்பவில்லை.

இவ் இரு சகோதரர்களையும் கடலில் தேடிச்சென்ற பல படகுகள் ஏமாற்றத்துடன் கரைதிரும்பியுள்ளன.

நாகர்கோவிலுக்கு அண்மையில் உள்ள கடலில் அவர்கள் கொண்டு சென்ற மீன் பிடி உபகரணங்கள் மட்டும் கடலில் மிதந்து வரக்காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (36)

### ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

## சம்மாந்துறை தொகுதிக்கு மின்விநியோக வேலைகள்

(அம்பாறை)

சம்மாந்துறை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த 15ஆம் குளணி, 11ம்குளணி சொறிக்கல்முனை ஆகிய கிராமங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென சம்மாந்துறை தொகுதிபாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம். ஏ அப்துல் மஜீட் வேண்டிக்கொண்டார்.

இதற்கேற்ப மின்சாரம் வழங்கப்படவிருந்தும் கடந்த காலங்களில் இருந்த இப்பிரதேச சூழ்நிலைகளின்காரணத்தினால் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

தற்போது எமது பிரதேசத்தில் சாதகமான சூழ்நிலை இருப்பதால் இவ்வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமென ஜனாப்அப்துல்மஜீட்வேண்டிக்கொண்டதற்கு முன்னாள் மின்சக்தி அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா உடன் நடவடிக்கை எடுத்தார்.

உடனடியாக 15ஆம் கிராம மின்சாரவேலையை ஆரம்பிக்குமாறு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார். இதன் படி 160 கே எம் டிரான்ஸ்போமரும் 3 வேஸ்லைட் 1கே எம் தூரமும் எல் ரி-2கே எம் தூரமும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக சுமார் 12இலட்சம் ரூபாய் ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது இவ் வேலை பூர்த்தி அடைந்ததும் 11ஆம், சொறிக்கல் முனை ஆகிய வேலைகள் தொடர்ந்து நடைபெறும் என்பதுகுறிப்பிடத்தக்கது. (48)

## றொனி டி மெல்லின் மீது மோசடி வழக்கு

(கொழும்பு)

றொனி டிமெல்லின் மீது மற்றொரு நம்பிக்கை மோசடிக் குற்றவழக்கு கொழும்பு உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் நிதிமந்திரி றொனி டிமெல்லிடம் ரூபா 889, 189-59 நம்பிக்கை வைப்பாகக் கொடுக்கப்பட்டதென்றும் இப்பணத்தைஅவர் கையாண்டிருக்க வேண்டும். அல்லது சொந்தத் தேவைக்காக உபயோகித்திருக்க வேண்டும் என்று அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கம் செய்யப்பட்டுள்ளது.

றொனி டிமெல்லுக்கெதிரான சாட்சியங்களாக திறைசேரியில் உதவிக் காரியதரிசி ஜி. குமாரதுங்க உள்ளகக் கணக்காளர் பிரிவுகளைச் சேர்ந்த பதில் பணிப்பாளர் கே.வேலாயுதபிள்ளை பிரதம கணக்காளர் பி. ஏ ஜெயசிங்கி பிரதம சிறாவ் பி. பாலசுப்பிரமணியம், நிதி அமைச்சின் காரியதரிசி ஆர் பாஸ்கரலிங்கம் லண்டனிலுள்ள ஸ்ரீ லங்கா உயர் ஸ்தானிகர், ஏ.எஸ்பி (சி. ஐ. டி) மோகன் ஜெயசூரியா ஆகியோர் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார்கள்.

இன்னிசை உலகில்
மறக்க முடியாத பெயர்...

SkyRose

நவீன கருவிகளின்
தொழில் நுட்பத் திறனில்
கைதேர்ந்த தொழில் நுட்பவியலாளர்களின்
இயக்கத்தில்... இசைப் பதிவுகளை
செய்து கொள்ள
விஜயம் செய்யுங்கள்!

"ஸ்கைறோஸ்"
இல, 1, பஸ் நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

(B-852)

## தமிழீழ இணக்க மன்று

தமிழீழப் பகுதியில் பல வருடங்களாக நடந்த போரினால் சட்டம், ஒழுங்கு முறையாகப் பேணப்படவில்லை.

சட்டம், ஒழுங்கு ஓரளவுமுறையாகப்பேண அமைக்கப்பட்டவைகளே தமிழீழ இணக்க மன்றுகள் ஆகும். (இணக்க அவைகள்)

இந்த இணக்க மன்றுகள் மூலம் மக்கள் பெருமளவில் பயனடைந்தார்கள்.

1. அந்தந்த ஊரில் வாழ்ந்துவருபவர்களுக்கும், ஊரின் நிலைமையை முழுமையாக நன்கறிந்தவர்களும், மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களுமே மன்றில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

அதனால் பிணக்குகளை அவர்கள் எளிதில் விளங்கி குறுகிய காலத்தில் நீதி வழங்கினார்கள்.

2. பெருமளவில் பணத்தைச் செலவழித்து நேரத்தையும் செலவழித்து அரச நீதி மன்றம் சென்று பிணக்குகளுக்கு தீர்வு காணவேண்டிய தேவைகள் இருக்கவில்லை.

3. பணமுள்ளவர்களால் தமக்கேற்ற முறையில் வழக்குகளின் தீர்ப்புகளை மாற்றமுடியாதிருந்தது.

4. சாதாரண ஏழைகள், ஒரு காலத்தில் பணமின்றி நீதி மன்றம் செல்ல முடியாதிருந்தவர்கள், பணப்பலம் கொண்டோரால் ஒடுக்கப்பட்டவர்கள், எல்லோரும் இவ் இணக்க மன்றுகள் மூலம் பெரும் பயனடைந்தார்கள்.

5. ஒவ்வொரு ஊர் மக்களும் பிணக்குகளை தமக்குள்ளே பேசி தீர்த்துக்கொள்ளும் அளவிற்கு பக்குவம் பெற்றுள்ளார்கள்.

எனவே இவ் மன்றுகள் மக்களுக்குப் பணச்செலவு அதிகமின்றி காலதாமதமின்றி குறுகிய காலத்தில் எந்தச் சிக்கல்களையும் தீர்த்து வைத்து நீதித்துறையில் பெரும் பங்காற்றி வருகின்றன.

இம்மன்றுகள் அனைத்துமே நேர்மையாக ஒழுங்காக நடப்பதை மேற்பார்வை செய்ய வேண்டியது அவ்வூர் மக்களின் கடமையாகும்.

இது உங்கள் இணக்கமன்று. இதனைச் சிறப்பாக செயற்படச் செய்வது உங்கள் பொறுப்பு.

இம்மன்றுகள் சிறப்பாகச் செய்யப்படுவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் முழு ஒத்துழைப்பையும் யும் ஆதரவையும் வழங்குவார்கள்.

(தொடரும்)

BITSMANS
INSTITUTES, MANIPAY.

ஆண்டு 5 முதல் 11 வரை
G. C. E. A/L - கலை, வர்த்தகம், விஞ்ஞானம்
திறமை மிக்க பட்டதாரி ஆசிரியர்களினால்
போதிக்கப்பட்டு வரும் நிறுவனம்.

Bitsmans Institutes,
Manipay.

(B/850)

காஷ்மீர் பிரச்சினை

# இந்திய உள்நாட்டுப் பிரச்சினை என கூறுவதே பிரச்சினைக்குக் காரணம்

## --பாக்கிஸ்தான் வெளியுறவு அமைச்சர்

(வாஷிங்டன்)

இந்திய-டாகிஸ்தான் பிரச்சினைக்கு மூல காரணம் காஷ்மீர் விவகாரம் தனது உள்நாட்டு விவகாரம் என இந்தியா கூறுவதில் இருந்து வந்தது என பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் யாகூப் கான் குற்றஞ்சாட்டுகிறார்.

அத்துடன் காஷ்மீர் இந்தியாவின் உள்நாட்டுக் காரணங்களில் ஒன்று அல்ல என்று பாகிஸ்தான் கூறுவதையும் வலியுறுத்திக் குறிப்பிட்டார்.

இவ்வாறாக வாஷிங்டனில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்களின் பேச்சு வார்த்தையின் முடிவில் பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் யாகூப்கான் தெரிவித்தார்.

அதே வேளை இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜரால் முதலில் பாகிஸ்தான் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்றும் கூறினார்.

இந்தியா காஷமீர் விவகாரம் குறித்து பேசவில்லை என்றும் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களையும், உதவிகளையும் வழங்குவதை நிறுத்த வேண்டும் என்பதைப் பற்றியே தான் கதைக்க தயாராக இருப்பதாக ஐ. கே. குஜரால் தெரிவித்தார்.

இதற்கிடையில் பதட்டத்தை தணிக்கவும், அவ்வப்போது பல மட்டங்களில் பேச்சுவார்த்தை நடத்தவும் இரு அமைச்சர்களிடையே இணக்கம் காணப்பட்டுள்ளது.

இப் பேச்சு வார்த்தையின் நிலைமை பற்றிக் குறிப்பிட்ட அமெரிக்க அதிகாரிகள் இப் பேச்சு வார்த்தை அடிப்படைப் பிரச்சினையை தீர்க்க வழி வகுக்கவில்லை என்றும், ஆனால் முன்னோடியான முயற்சி என்றும் தெரிவித்தார்.

## அமெரிக்காவின் நடவடிக்கை அரபுநாடுகள் கண்டனம்

(நிக்கோஸியா)

இஸ்ரேலின் தலைநகர் ஜெரூஸலேம் என்பதை அமெரிக்க பாராளுமன்றம் ஆதரித்திருப்பதை அரபு நாடுகள் கண்டித்திருக்கின்றன.

இவ்வாறு அமெரிக்கா நடந்துகொண்டமை அரபு நாடுகளின் எதிர்ப்பை சம்பாதித்திருப்பதுடன், பெய்ரூட்டில் இருந்து அமெரிக்க பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படுவதையும் பாதித்துள்ளது.

மேற்குலக நாடுகளின் ஆதரவு நாடுகளான ஜோடான் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம், லிபியா ஆகிய நாடுகளும் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன.

இஸ்ரேலிய யூதர்களின் நிர்ப்பந்தத்திற்கு அமெரிக்க பாராளுமன்றம் பணிந்துவிட்டதாக லிபியா கூறியுள்ளது.

## இரு பலஸ்தீனிய அகதிகள் பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய இராணுவத்தினருக்கும் அகதி முகாமில் இருந்த பலஸ்தீனியருக்கும் இடையில் நடந்த கலவரத்தில் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டார்கள் நூறு பேர் வரை காயமடைந்துள்ளார்கள்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குள்ளான பகுதியில் பலஸ்தீனியர்கள் ரம்ழான் பண்டிகையை ஒட்டி நடந்த கொண்டாட்டங்களின் போது அகதி முகாம் ஒன்றில் இருவருக்கும் இடையில் நடந்த மோதலில் இவ் உயிர் இழப்புக்கள் இடம்பெற்றன.

மேலும் இஸ்ரேலிய ராணுவத்தினர் தமது அறிக்கையில் தமது சார்பிலும் ஆறுபேர் உயிர் இழந்தனர் எனத் தெரிவித்தனர்.

## எம்.பிக்கள்தொகுதிகளுக்கு அச்சமின்றிசெல்லவேண்டும்

### -சபாநாயகர்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது தொகுதிகளுக்கு அச்சமின்றி சுதந்திரமாகப் போய்வர உரிமை வேண்டும்.

இவ்வாறு சபாநாயகர் எம். எச். மொகமட் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கு கூறினார்.

பாராளுமன்ற எம். பிக்கள் தமது தொகுதிகளுக்கு சென்று வரதடைகள் இருக்கக் கூடாது. இதில் அரசு கவனம் செலுத்தவேண்டும்.

இவ்வாறுஎம்.பிக்கள் தொகுதிகளுக்குச் செல்லும் உரிமை இருக்காவிட்டால் பாராளுமன்ற ஜனநாயகம் நிலைக்க முடியாது இவ்வாறு சபாநாயகர் தெரிவித்தார்

## கல்முனையில் தேனிசைச் செல்லப்பா

(அம்பாறை)

தமிழீழ எழுச்சிப்பாடல்களைப்பாடிய தேனிசைச்செல்லப்பாவின் இசை விழா கல்முனை உவெஸ்லி கல்லூரி மைதானத்தில் எதிர் வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்,

இதற்கான சகல எற்பாடுகளையும் கல்முனைப் புலிகள் பொறுப்பாளர் திரு. கண்ணன் மேற்கொண்டுவருகின்றார்'

(48)

## இலவச ஆடை பெறச் சென்று ஜனநெரிசலில் 32பேர் பலி!

(டாக்கா)

பங்களாதேசின் சிட்டாகொஸ் நகரில் ஏழை மக்களுக்கு ஆடையும், பணமும் வழங்கப்பட்ட சம்பவத்தில் மக்கள் நெரிசலில் 32பேர் வரை இறந்துள்ளனர், உள்ளூர் புகையிலை நிறுவனம் ஒன்று ரம்ழான் பண்டிகையை ஒட்டி ஏழைகளுக்கு ஆடையும் பணமும் விநியோகிக்கப் போவதாக வெளிவந்த செய்தி கேட்டு சுமார் இருபதினாயிரம் ஏழை மக்கள் அதிகாலைப் பொழுதில் இருந்தே இந் நிறுவனத்தின் பண்டக சாலைக்கு முன்னால் கூடி நின்றார்கள்.

ஆடை, பணம் விநியோகம் தொடங்கியதும் முண்டியடுத்துக் கொண்டு சென்ற மக்கள் நெரிசலில் அகப்பட்டு இதுவரை 32 பேர் உயிர் இழந்துள்ளனர்.

## ஆசிரிய, அதிபர் நியமனங்களில் இனவிகிதாசாரம் இல்லை

### தமிழர் ஆசிரியர் சங்கம் புகார்

(பண்டத்த்ரிப்பு)

அரசாங்க நியமனங்கள் திறமை, தகைமை விகிதசார அடிப்படையில் தேட வேண்டும் என ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார்.

ஆனால் தமிழர் ஆசிரியர் பதவி உயர்வுகள், அதிபர் நியமனங்கள் விகிதாசார அடிப்படையில் நடைபெறாதது மிகவும் மனவருத்தத்திற்குரிய செயலாகும்.

முதலாந்தர இரண்டாந்தர அதிபர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் தொகையும் மிகக் குறைவானது. இவ்வாறு கல்வி அமைச்சர் அத்துலத் முதலிக்கு தந்தி மூலம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் பாடசாலைகளில் பெருந்தொகையான வெற்றிடங்கள் அதிபர் பதவிகட்கு இருக்கின்றன. அவற்றை விகிதாரசார அடிப்படையில் உரிய இடங்கள் ஒதுக்கி தருமாறு இச் சங்க பொதுச் செயலாளர் திரு த.மகாசிவம் கேட்டுள்ளார்.

இதே மாதிரியான மகஜர் ஒன்றையும் கல்வி இராஜாங்க அமைச்சர் ராஜ மனோகரி புலேந்திரனுக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

(12)

## ஏழு லட்சம் பெறுமதியான கரன்சி நோட்டு கடத்தல் பணிப் பெண்ணுக்கு அபராதம்

(கொழும்பு)

வெளிநாட்டு விமானம் ஒன்றின் பணிப்பெண் ஒருவர் ஏழு லட்சம் பெறுமதியான கரன்ஸி நோட்டுக் கடத்தலில் இருபத்திரெண்டுஇலட்ச ரூபா அவருக்கு அபராதமாக அறவிடபட்டதுடன் கடத்தல் தொகையும் பறிமுதல் செய்யப்பட்டது.

தற்போது அப்பணிப்பெண் தனது குற்றப் பணத்தை செலுத்துவதற்குவசதிஇல்லை என சுங்கப்பகுதியிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து நீர்கொழும்பு மஜிஸ்திரேட்டு முன்னிலையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## பாடசாலைகளுக்கு பூகோளப்படங்கள்

இலங்கை ஐக்கிய நாடுகள் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவு ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட வகுப்பறையில் தொங்க விடப்படும் பூகோளப்படங்களை சில பாடசாலைகளுக்கு வழங்க முன்வந்துள்ளன.

இவைகள் இவ் ஆண்டின் இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கும் போது வழங்கப்படும்.

அப்பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு:-

மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம். நாரந்தனை றோமன் கத்தோலிக்க

## காங்கேசன்துறை கொத்தணியில் வதிவிட உடற்பயிற்சி மெய்வல்லுநர் பயிற்சி நெறி

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறைக் கொத்தணிக்குட் பட்டுள்ள பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவ மாணவிகளையும் ஆசிரியர் ஆசிரியைகளையும் கொண்ட வதிவிட உடற்பயிற்சி, மெய் வல்லுநர் பயிற்சி நெறி ஒன்று காங்கேசன்துறைக் கொத்தணிச்சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை முதலாந்தவணைக் காலங்களில் நடைமுறைப்படுத்தப் படவிருந்த மேற்படி பயிற்சி நெறி

## கரவெட்டியில் இன்று அஞ்சலிக் கூட்டம்

(கரவெட்டி)

இந்தியப் படைகளுடனான நேரடி போரில் வீரமரணமடைந்த நெல்லியடிப் பிரதேச பொறுப்பாளர் கப்டன் மோகன் மாஸ்டர், லெப்டி

## கோட்டைரயில் நிலையத்தில் தங்கக்கட்டிகளுடன் கைது

(கொழும்பு)

கடந்தபுதன்கிழமை கொழும்பு கோட்டை புகையிரதநிலையத்தில் பிரயாணிஒருவரிடம்இருந்துஐந்து லட்சம் ரூபா பெறுமதியான ஏழு தங்கக்கட்டிகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினார்கள்.

இவர் கெழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக ரயில் நிலையத்தில் நின்றபோதே சோதனைக்குஉட்படுத்தப்பட்டார்.

இவருக்கு 15 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுமேல் விசாரணைக்காக கொழும்பு சுங்கத் தடுப்புக் காரியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## வவுனியா பூந்தோட்ட வீதிக்கு மின்சாரம் வழங்கவில்லை

...அதிபர் பதவிக்கான நேர் முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் தொகையும் மிகக் குறைவானது. இவ்வாறுகல்வி [illegible] அமைச்சர் ராஜ மனோகரி புலேந்திரனுக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார். (12)

# கரன்சி நோட்டு கடத்தல் பணிப் பெண்ணுக்கு அபராதம்

(கொழும்பு)

வெளிநாட்டு விமானம் ஒன்றின் பணிப்பெண் ஒருவர் ஏழு லட்சம் பெறுமதியான கரன்ஸி நோட்டுக் கடத்தலில் இருபத்திரெண்டுஇலட்ச ரூபா அவருக்கு அபராதமாக அறவிடபட்டதுடன் கடத்தல் தொகையும் பறிமுதல் செய்யப்பட்டது.

தற்போது அப்பணிப்பெண் தனது குற்றப் பணத்தை செலுத்துவதற்குவசதிஇல்லை என சுங்கப்பகுதியிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து நீர்கொழும்பு மஜிஸ்திரேட்டு முன்னிலையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# வவுனியா பூந்தோட்ட வீதிக்கு மின்சாரம் வழங்கவில்லை

(வவுனியா)

வவுனியா - பூந்தோட்டம் வீதி ஓரங்களில் மின்கம்பங்கள் இருந்தும், அவற்றிற்கான மின்சாரம் வழங்கப்படவில்லை.

கடந்த கால வன்செயல்களுக்கு முன்னர் இவ்வீதி மின்கம்பங்களில் இரவுநேர மின் விளக்குகள் எரிந்தன. சில ஆண்டுகளாக இவ்வீதி இருளடைந்து காணப்படுகிறது.

இதேசமயம், மேற்படி வீதி சேதமடைந்து காணப்படுகிறது. மகா இறம்பைக்குளம் காத்தாடி, சின்னக்குளம், தம்பளைச் சோலை,பெரியார் குளம் போன்ற கிராமங்களில் வாழும் மக்கள் இவ்வீதியையே தமது பிரதான போக்குவரத்துப்பாதையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

வவுனியா நகரசபை பதிர்வாகம் உடனடியாக இக்குறைபாடுகளை கவனத்தில் எடுத்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. (தி)

## நெல்லியடி இலங்கை வங்கியில்

# சேமிப்புக் கணக்கிற்கு ரூ. 3000 வழங்கப்படுகிறது

(கரவெட்டி)

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் சேமிப்புக்கணக்கில் வைப்பிலிட்ட வாடிக்கையாளர்கள் தமது வைப்புப் பணத்தில் தமக்குத் தேவையான தொகையை உடனடியாக மீளப்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னர் ஐயாயிரம் ரூபா வரை சேமிப்புக்கணக்கிலிருந்து மீளப்பெற முடியும். ஆனால் தற்போது மூவாயிரம் ரூபாவையே வங்கி வழங்குமென வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு நிலை காரணங்களினாலேயே இந்த ஏற்பாடு என்றும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் அவசிய தேவைகளுக்காக கூடிய தொகையை மீளப்பெற முடியாதிருப்பதாக வாடிக்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# ஆங்கில ஆசிரியர் நியமனம் அதிபர்களுக்கு அதிகாரம்

(கொழும்பு)

ஆங்கிலத்தை முதலாம் ஆண்டு முதல் கற்பிக்க கல்வியமைச்சு எடுத்த நடவடிக்கைகளையடுத்து ஆங்கிலஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

பெற்றோரும், பழைய மாணவரும் கலந்தாலோசித்து இந்த ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

க. பொ. த. சாதாரணதர பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிவிசேட சித்தி பெற்றவர்களுக்கு இவ்வாறு ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது

இதன் மூலம் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் சிறு வயது முதல் ஆங்கிலம் போதிக்க வழி ஏற்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாடசாலைகளுக்கு பூகோளப்படங்கள்

இலங்கை ஐக்கிய நாடுகள் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவு ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட வகுப்பறையில் தொங்க விடப்படும் பூகோளப்படங்களை சில பாடசாலைகளுக்கு வழங்க முன்வந்துள்ளன.

இவைகள் இவ் ஆண்டின் இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கும் போது வழங்கப்படும்.

அப்பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு:-

மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம். நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை. சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலயம். நெடுந்தீவு மகா வித்தியாலயம். இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி. யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் மகா வித்தியாலயம். கனகரத்தினம் மகா வித்தியாலயம். இணுவில் சைவ மாாஜன வித்தியாலயம். நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி. நயினாதீவு மகா வித்தியாலயம். பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம். கரவெட்டி ஞானாசிரிய கல்லூரி. புங்குடு தீவு சிறி சித்தி விநாயகர் மகா வித்தியாலயம். கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி. கோப்பாய் கொத்தணிப் பாடசாலை. என்பனவே.

## காங்கேசன்துறை கொத்தணியில்

# வதிவிட உடற்பயிற்சி மெய்வல்லுநர் பயிற்சி நெறி

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறைக் கொத்தணிக்குட் பட்டுள்ள பாடசாலைகளின் உயர் வகுப்பு மாணவ மாணவிகளையும் ஆசிரியர் ஆசிரியைகளையும் கொண்ட வதிவிட உடற்பயிற்சி, மெய் வல்லுநர் பயிற்சி நெறி ஒன்று காங்கேசன்துறைக் கொத்தணிச்சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை முதலாந்தவணைக் காலங்களில் நடைமுறைப்படுத்தப் படவிருந்த மேற்படி பயிற்சி நெறி க.பொ.த (சா'த) விடைத் மதிப்பீட்டுப் பணிக்காக பிற்போடப் பட்டு மே மாத இரடாம் வாரத்தில் நடை பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள உடற் கல்வி ஆசிரியரின் தட்டுப் பாட்டையடுத்து மேற்படி பயிற்சி மேற்கொள்ளப் படுகிறது.

பயிற்சி நெறி ஒழுங்குகளை கொத்தணி விளையாட்டு அமையச் செயலாளரும் நடேஸ்வரகக் கல்லூரி விளையாட்டுந்துறை ஆசிரியருமான திரு.வ.முருகேசு மேற்கொண்டுள்ளார். (41)

# கரவெட்டியில் இன்று அஞ்சலிக் கூட்டம்

(கரவெட்டி)

இந்தியப் படைகளுடனான நேரடி போரில் வீரமரணமடைந்த நெல்லியடிப் பிரதேச பொறுப்பாளர் கப்டன் மோகன் மாஸ்டர், லெப்டினட் முரளி இளம் புலி பட்சம் ஆகியோரின் இரண்டாம் ஆண்டு நினைவையொட்டி இன்று சுடரொளி விளையாட்டுக் கழகம் மாபெரும் விளையாட்டுப் போட்டியும், அஞ்சலிக் கூட்டமும், சுடரொளி மைதானத்தில் நடாத்தவுள்ளது.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.

மேற்படி வீரமரணமடைந்த வீரவேங்கைகளின் 'உருவப் படங்களும் திரை நீக்கம் செய்கப்படவுள்ளன. (18)

# கோட்டைரயில் நிலையத்தில் தங்கக்கட்டிகளுடன் கைது

(கொழும்பு)

கடந்தபுதன்கிழமை கொழும்பு கோட்டை புகையிரதநிலையத்தில் பிரயாணிஒருவரிடம்இருந்துஐந்து லட்சம் ரூபா பெறுமதியான ஏழு தங்கக்கட்டிகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினார்கள்.

இவர் கெழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக ரயில் நிலையத்தில் நின்ற போதே சோதனைக்குஉட்படுத்தப்பட்டார்.

இவருக்கு 15 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுமேல் விசாரணைக்காக கொழும்பு சுங்கத் தடுப்புக் காரியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# இந்திய இராணுவத்தால் தேவாலயம் சேதமானது

## தூதுவருக்கு மேற்றாணியார் புகார்

பளையிலுள்ள புனித அன்ரூஸ் அங்கிலிக்கன் தேவாலயத்தில் இந்திய இராணுவம் முகாமிட்டிருந்ததால் இதற்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

அத்துடன் ஆலய வளவில் இருந்த பயன்தரு மரங்களும் தறிக்கப்பட்டதால் சுமார் 5 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கொழும்பிலுள்ள இந்திய தூதுவருக்கு அங்கிலிக்கன் சபை மேற்றாணியார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

இந்த ஆலயத்தில் கதவுகள் நிலைகள் அகற்றப்பட்டுள்ளன வழிபாட்டு மண்டபம் இடிந்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இங்கிருந்த தளபாடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

# வீடமைப்புக் கடன் கிராமங்களுக்கு விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

15 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ், பிரதேச சபை எல்லைக்குள் குடியிருக்கும் வீட்டுத் தேவை உடையவர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான நடவடிக்கைகளை யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இனிக் கிராமவாசிகளும் வடபகுதியில் கடனைப் பெறலாம்.

மேற்படி கடனைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் மே 7 ஆம் திகதி முதல் உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவில் கடமையாற்றும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை வீடமைப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். படிவங்களைப் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டிய திகதி மே 30 ஆம் திகதியாகும்.

இத்திட்டத்தின் கீழ் நன்மை பெறவுள்ள கிராமவாசிகள் ரூபா 2400/-க்கு உட்பட்ட மாதாந்த வருமானம் உடையவர்களாகவும், ஏலவே தேசிய வீடமைப்பு அதிகாரசபையில் அல்லது வீடமைப்புத் திணைக்களங்களில் உதவி பெற்றவர்களாக இருக்கக் கூடாது.

விண்ணப்பப் படிவங்களை தேசிய அடையாள அட்டை, குடும்ப பதிவு அட்டை சகிதம் ரூபா 2/- செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நகர கிராமிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1989 ஆம் ஆண்டில் கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து கையளித்தவர்களும் இச் சந்தர்ப்பத்தில் மீண்டும் தமது பெயர்களாகப் பதிவு செய்தல் வேண்டும்.

முன்னுரிமைப்படி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 1990 ஆம் ஆண்டிற்கிடையில் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

வீடமைப்புக் கடனுக்கு தகுதி பெற்றவர்களின் பெயர்கள் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்படும். பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தகுதியற்றவர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படுமாம். (61)

# தொழுநோய் ஆய்வுகூடம் காட்டுப்புலத்தில் அமையும்

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் காட்டுப்புலம் கிராமத்தில் உள்ள தொழுநோயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வைத்திய அதிகாரியினை நேரில் சந்தித்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள, வழிமுறைகளை விளககி கடைப்பிடிக்குமாறு தெரிவித்தனர்.

நோயை முற்றாக அக்கிராமத்தில் இருந்து அழித்தொழிப்பதற்கு அக்கிராம மக்கள் வைத்திய அதிகாரிகளுடன் ஒத்துழைக்கவேண்டும். தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும். கொடுக்கும் மருந்துகளை எடுத்தும் சுத்தம் தடுப்பு வழிவகைகளை கையாளாதவரையில் தாம் எடுக்கும் எந்த நடவடிக்கைகளும் பலனளிக்க முடியாது என விளக்கினார்.

இது ஒரு சமுதாயப் பிரச்சனையாக மாறாது பார்த்துக் கொள்வது அவசியம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தொழுநோய் பற்றிய ஆய்வொன்றையும்நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

காட்டுப்புலம் வருவதற்கு முன் கோப்பாய் வைத்திய அதிகாரி அலுவலகத்தில் யாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் என். சிவராஜா, யாழ். மாவட்ட தொழுநோய் தடுப்பு அதிகாரி டாக்டர் எம். குணரத்தினம் உட்பட மற்றுப் பலர் கலந்துரையாற்றினர்.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள், மற்றும் சுகாதாரசேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த தொற்றுநோய்த் தடுப்பு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பழைய மாணவர், நலன் விரும்பிகள் உதவியுடன்

# நடேஸ்வராக் கல்லூரியில் அபிவிருத்தி வேலைகள்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியின் அபிவிருத்தி வேலைகள் கல்லூரியின் பழையமாணவர்களினாலும், மாணவர்களினாலும், நலன் விரும்பிகளினாலும் செய்து முடிக்கப்படுகின்றன.

சுமார் ஒரு இலட்சம் ரூபா மதிப்பிடத்தக்க அபிவிருத்தி வேலைகள் இதுவரையில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளுமான திரு. பரம்சோதி, திரு. இந்திரநாதன் ஆகியோர் தலா 15 ஆயிரம் ரூபா 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டடத் திருத்தமும், மைபூசி அழகுபடுத்துதலுமான வேலைகளைச் செய்வித்துள்ளனர்.

பழைய மாணவர்கள் ஒன்றுசேர்ந்து பாடசாலைக்குள் தார் வீதி அமைத்தலும், கல்லூரிக்குள் இருக்கும் அம்பாள் ஆலயத்தைப் புனரமைத்து மைபூசி அழகுபடுத்தியும், சங்கீத, நடன கூடங்களுக்கு மைபூசி அழகுபடுத்தியும், கல்லூரிக்குப் புதிதாக கதவு அமைத்துக் கொடுத்தும் மின் உபகரணங்கள் வழங்கியும் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வேலைகளைச் செய்து முடித்துள்ளனர்.

கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக விளையாட்டு உபகரணங்கள் சில வற்றைக் தமது செலவில் பெற்றுக் கல்லூரிக்கு அன்பளிக்க மேலும் சில பழைய மாணவர்கள் முன் வந்துள்ளனர்.

கல்லூரிப் புதிய மண்டபத்துக்கு உயர் வகுப்பு மாணவர்கள் சிரமதான அடிப்படையில் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்னிணைப்பு வேலைகளைச் செய்தும் முடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும் (41)

## மண்டைதீவுவீதி சீர்கேடு

(தீவுப்பகுதி)

மண்டை தீவு மக்கள் பிரயாணம் செய்யும் மண்டைதீவு யாழ்ப்பாணம் பிரதான வீதி சீரழிந்த நிறையில் உள்ளதனால் வாகனங்கள் கஷ்டப்பட்டே பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இவ் வீதி திருத்தம் செய்யப்படாத காரணத்தினால் யாழ்ப்பாணம் - மண்டைதீவு வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ் சேவையும் நடாத்த முடியாத நிலை உள்ளது.

மண்டைதீவிற்கு கடந்த மூன்று நான்கு வருடங்களுக்கு மேலாக போக்குவரத்துச் சபை பஸ் சேவைகள் நடாத்தப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (15)


# கொம்பியூட்டர் கல்வி

BASIC

d BASE - III +

LOTUS 1, 2, 3

WORD PROCESSING

புதிய வகுப்புகள் 30—4—1990 இல் ஆரம்பமாகின்றன

★ Lectures by Members of the Institute of date Processing management (London)

★ Practicals on I. B. M. (Compatibles)

★ Fees May be paid in Installments

★ தமிழிலும் விளக்கங்கள்

★ Valuable Certificate on Completion of Course

JOIN THE LEADERS


## உதவிச்செயலாளராக பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித்திணைக்களத்தில்பிரதமஇலிகிதர்வி.பொன்னம்பலம் பதவி உயர்வு பெற்றுஎதிர் வரும் மே 1 ஆம் திகதி முதல் ராஜாங்க கல்வி அமைச்சின்உதவி செயலாளர் பதவிக்கு நியமனம்பெற்றுள்ளார்.

இவர் அரசாங்க இலிகிதர் சங்கத்தின் முன்னாள் உதவித் தலைவரும் சங்கத்தின்மாவட்டச் செயலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


# அக்குபங்சர் வகுப்புகள்

பயிற்சி வகுப்புகள் யாவும் 1-05-1990இல் ஆரம்பமாகின்றன.

1. அக்குபங்சர் பயிற்சி M. Ac. F.
(ஆங்கிலமொழி மூலம்)
(சர்வதேச பல்கலைக்கழகப் பரீட்சை)

போதனாசிரியர்
Dr. V. S. K. சிவலோகநாதன்

2. அக்குபங்சர் பயிற்சி M. Ac. A.
(தமிழ்மொழி மூலம்)
(இலங்கை அக்குபங்சர் சங்கப் பரீட்சை)

போதனாசிரியர்
Dr. V. P. சுந்தரராஜன்

பிரதம பரீட்சையாளர்
பேராசிரியர்
Dr. அன்ரன் ஜெயசூரியா
அவர்கள்

வைத்தியர்களும், வைத்திய மாணவர்களும் மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் வகையில் வகுப்புகள் நடைபெறும்.

விபரங்களுக்கு:

சாயி மெடிக்கல் அக்கடமி
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(B/687)


# சுற்றாடலைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

சுற்றாடலை பாதுகாப்பதற்கும் அசுத்தமடைவதை தடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என சுற்றாடல் அமைச்சர் கலாநிதி விமால் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்ட மூலம் ஒன்று பாராளுமன்றத்தில் விரைவில் தாக்கிலாகும் எனவும் அவர் சொன்னார்.

நாட்டிலுள்ள கிராம சேவகர்கள் பிரிவுகளிலும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபைத் தலைவர் எஸ். கே. ஜினதாஸ கூறினார்.

## தமிழ் பொலிசார் மிகக்குறைவு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் பொலிசார் மிகக்குறைவாகவே உள்ளனர் சுமார் ஓரிரு தமிழ் பொலிசார் மட்டுமே இப்பகுதி பொலிஸ் நிலையங்களில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதே போன்று அம்பாறை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளசகலபொலிஸ்தடுப்பு முகாம்களிலும் தமிழ் பொலிசாரை காண்பதே அரிதாக உள்ளது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் கலந்து வாழும் இம்மாவட்டத்தில் தமிழர்கள் பொலிஸ் சேவையில் கணிசமான அளவு ஈடுபடுத்தப்படாததை இட்டு கவலையடைய வேண்டியுள்ளது.

இது விடயமாக பல பொது ஸ்தாபனங்கள் அம்பாறை பொலிஸ் அதிகாரிக்கு அறிவித்தும் இன்னும் நடவடிக்கை எடுக்கப் படாதது குறிப்பிடத்தக்கது. (42)

## விளையாட்டுப் போட்டி

(விசேட நிருபர்)

எம் மண்ணின் மீட்புக்காக மரணித்த எம் மண்ணின் மைந்தர்களை நினைவு கூருமுகமாக பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தினர் இன்றும் நாளையும் மாபெரும் விளையாட்டு, கலைப் போட்டிகளை நடத்துகின்றனர்.

போட்டிகளில் அதிதீரவீரச் செயற்போட்டிகளும் இடம் பெற உள்ளன. போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுப் பொருட்கள் இறுதி நாள் நிகழ்ச்சிகளில் வழங்கப்படும். (21)


## இரத்ததானம்

(அம்பாபறை)

அன்னை பூபதியின் 2ம் ஆண்டு நினைவை யொட்டி பாண்டிருப்புக் கிராமத்தில் இரத்ததானம் செய்தனர்.

பாண்டிருப்பு புலிகள் இயக்க பொறுப்பாளர் திரு வின்சன்ற் அவர்களின் ஏற்பாட்டின் பேரில் கல்முனை ஆதாரவைத்தியசாலையில் வைத்து இரத்ததானம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (48)

# வீரவேங்கை மேஜர் நரேனின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரன்

**V: M. V. நல்லநாதன் ஜனார்த்தனன்**

| | |
|---|---|
| தாயுள்ளம் துலங்க | தாயகம் இலங்க |
| பிறந்த நாள் | பிரிந்த நாள் |
| 24- 11- 1963 | 28- 04- 1988 |

கருவினிலே மலராகிக் கனிந்து வந்தே
கனகமுலைப் பாலருந்தித் தவழ்ந்து வாழ்ந்து
திருவிழியில் ஒளிகான்று தேனைச் சிந்தித்
தெய்வீக மொழிகொஞ்சச் சிரித்த நாளில்
அருமருந்தே செங்கரும்பே அன்பே எங்கள்
ஆருயிரே நின்னகத்தின் போர் வீரத்தை
ஒரு துளியும் நாமுணர்ந்து கொண்டோ மில்லை
உயிர்க் குயிராய்த் தாயகத்தைக் காக்க வந்தாய்.

★

பாலகனாய்ப் பயில்பருவக் காலந் தன்னில்
பகைவர்களைக் குறிபார்த்துச் சுடுவாய் அந்தக்
கோலவிளை யாட்டதனிற் கொதித்த நெஞ்சின்

குடிசார் இயந்திரவியல், மின்னியல்

d BASE - III +
LOTUS 1, 2, 3
WORD PROCESSING

புதிய வகுப்புகள் 30—4—1990 இல் ஆரம்பமாகின்றன

- ★ Lectures by Members of the Institute of date Processing management (London)
- ★ Practicals on I. B. M. (Compatibles)
- ★ Fees May be paid in Installments
- ★ தமிழிலும் விளக்கங்கள்
- ★ Valuable Certificate on Completion of Course

| JOIN THE LEADERS |

For Details

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3-rd Cross Street.
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.

(B/844)

---

Dr. அன்ரன் ஜெயசூரியா
அவர்கள்

வைத்தியர்களும், வைத்திய மாணவர்களும் மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் வகையில் வகுப்புகள் நடைபெறும்.

விபரங்களுக்கு:

**சாயி மெடிக்கல் அக்கடமி**
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(B/687)

---

(விசேட நிருபர்)

எம் மண்ணின் மீட்புக்காக மரணித்த எம் மண்ணின் மைந்தர்களை நினைவு கூரு முகமாக பொலிகை ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தினர் இன்றும் நாளையும் மாபெரும் விளையாட்டு, கலைப் போட்டிகளை நடத்துகின்றனர்.

போட்டிகளில் அதிதீரவீரச் செயற்போட்டிகளும் இடம் பெற உள்ளன. போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுப் பொருட்கள் இறுதி நாள் நிகழ்ச்சிகளில் வழங்கப்படும்.

(21)

---

அமரன்

**V. M. V. நல்லநாதன் ஜனார்த்தனன்**

| தாயுள்ளம் துலங்க பிறந்த நாள் | தாயகம் இலங்க பிரிந்த நாள் |
|---|---|
| **24- 11- 1963** | **28- 04- 1988** |

கருவினிலே மலராகிக் கனிந்து வந்தே
கனகமுலைப் பாலருந்தித் தவழ்ந்து வாழ்ந்து
திருவிழியில் ஒளிகான்று தேனைச் சிந்தித்
தெய்வீக மொழிகொஞ்சச் சிரித்த நாளில்
அருமருந்தே செங்கரும்பே அன்பே எங்கள்
ஆருயிரே நின்னகத்தின் போர் வீரத்தை
ஒரு துளியும் நாமுணர்ந்து கொண்டோ மில்லை
உயிர்க் குயிராய்த் தாயகத்தைக் காக்க வந்தாய்.

★

பாலகனாய்ப் பயில்பருவக் காலந் தன்னில்
பகைவர்களைக் குறிபார்த்துச் சுடுவாய் அந்தக்
கோலவிளை யாட்டதனிற் கொதித்த நெஞ்சின்
குமுறல்களை இளமைதனில் வெளிக் கொணர்ந்தே
ஓலமிடும் எரிமலையாய் விடுதலைப் போர்
உருவான இயக்கத்தின் அங்க மாகிக்
காலமெலாம் வட கிழக்கு மாகா ணத்தில்
களங்களிலே இலங்குமணித் தங்க மானாய்,

★

சந்தனப்பொன் முகம்வாடப் பசிநோக் காதே
சத்தியச்சொற் சித்திரமாய் வீரத் தொண்டின்
சிந்தனையே உயிர்மூச்சாய் இதயந் தன்னில்
செந்தமிழே பாய்ந்தோடப் புலியாய் சீறிச்
சந்ததியின் எதிர்கால நல்வாழ்வுக் காய்ச்
சதிகாரக் கும்பல்களை எதிர்த்து வென்றாய்
இந்தியர்கள் அமைதிதனை உனக்குத் தந்தார்.
எம்மண்ணின் வரலாற்றில் மகனே வாழ்வாய்.

- ★ -

பிரிவுத் துயர் சுமக்கும்
பெற்றோர், சகோதரர், உறவினர்,
அன்பர்கள்.

'நரேன் கொட்டேஜ்'
218/9, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(R/437)

---

குடிசார் இயந்திரவியல், மின்னியல்
விவசாய பொறியியலாளர்கள்
உற்பத்தியாளர்கள்
ஆலோசகர்கள்
ஒப்பந்தக்காரர்கள்

**டைனமிக் என்ஜினியரிங் லிமிட்டெட்**

10, குறோஸற் லேன்,
கச்சேரி நல்லூர் றோட்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

B/851

---

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் - யாழ்ப்பாணம்.
A/L 90 வினாவிடை வகுப்பு
இந்து நாகரிகம் - அருள்நங்கை
28- 4- 90 1 மணி

(B/819)

---

**சதா பொன்ஸ்**
அல்வாய்

00 00
00 00

பத்திரிகை விற்பனையாளர்கள்

- ஈழநாதம்
- உதயன்
- ஈழநாடு
- திசை

B/ 846

---

குறைந்த விலை! நிறைவான வேலை!

உங்கள் வீடுகளுக்குத் தேவையான
கதவு, ஜன்னல் வகைகள்
திராந்திகள், பலகைகள்
அனைத்திற்கும் சிறந்த இடம்!

அத்துடன்
மரவேலை சம்பந்தமான
ஒப்பந்தங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**சந்திரவதனி தச்சுத் தொழிற்சாலை**

உரிமையாளர்: ம. பாலச்சந்திரன்

பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

B-849

### சிந்தனைக்கு

உலகில் மிகச் சிறந்த சந்தை
எங்களுக்குத்தான் - காரணம்
நாங்கள் விநியோகிப்பது
அன்பை மட்டுமே

– அன்னை திரேசா


ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 28 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208


## குழப்பக்காரர் கவனம்!

வவுனியாப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொலிஸார் மிக மோசமாக நடத்தப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது.

இது பற்றிய செய்தி நேற்றைய 'ஈழநாதம்' பத்திரிகையில் முதல் பக்கத் தலைப்புச் செய்திகளில் ஒன்றாக வெளிவந்திருந்தது.

வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் முந்நூற்றைம்பது சிங்களப் பொலிஸார் இருக்கின்றனர். இவர்களுடன் ஐம்பத்தைந்து தமிழ்ப் பொலிசாரும் கடமை ஆற்றுகின்றனர்.

இங்கு கடமையாற்றும் சிங்களப் பொலிசாருக்கு அதிநவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ப் பொலிஸாருக்கு இரண்டாவது மகாயுத்தத்துக்கு முன்னுள்ள பத்தாம் பசலி ஆயுதங்களே வழங்கப்பட்டிருக்கின்றன.

சில வருடங்களுக்கு முன்னர் சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ்ப் பொலிஸாருக்கு ஆயுதங்களே வழங்கப்படாமலிருந்ததைவிட இது மேல் என்று பொலிஸ் தலைமைப்பீடம் சொல்லக்கூடும்.

வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் உயர்பீடத்தில் தமிழர்தான் உள்ளனர். ஆனாலும் அங்கு கடமையாற்றும் தமிழ்ப் பொலிசாருக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதெல்லாம் சிங்களப் பொலிசார்தான்.

இது ஒன்றும் இலங்கையில் புதிய விஷயமல்ல. பொலிஸில் மட்டுமல்ல, ஆயுதப் படைகளிலும் ஏன் அரசாங்க இலாகாக்களிலும்கூட இதேநிலை இன்னமும் நீங்காமலிருக்கிறதென்பதும் உண்மையே.

1956 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்தபோது ஏற்படுத்தப்பட்ட ''அப்பே ஆண்டுவ'' மனப்பான்மை வகுப்புத் துவேஷமாக வளர்ந்து பூதாகாரமாக உருவெடுத்து இன்னமும் அது நீங்கியதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி பிரேமதாசா மும்மொழிகளிலும் அலுவல்கள் நடைபெறவேண்டுமென்று உத்தரவு போட்டாலும் தமிழ் மொழிக்கும் உத்தியோகமொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தாலும் நடைமுறையில் இன்னமும் ''அப்பே ஆண்டுவ'' மனப்பான்மை

# சகலமக்களும்சமாதானமாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு

## "தடைக்கற்களைத் தகர்த்தெறிந்து வரலாற்றுப் பெருமை சேர்க்கவேண்டும்"

**அவசரகாலச்சட்ட விதிகளை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஈழவர் ஜனநாயக முன்னணி உறுப்பினர் ஜனாப் சேகுதாவூத் பஷீர் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது.**

இந்தப் பாராளுமன்றத்தில் மாதாமாதம் நடைபெறுகின்ற அவசரகாலச் சட்டத்தினை நீடிப்பதற்கான விவாதத்தின்போது அண்மைக் காலங்களில் நாட்டில் எத்தனைகொலைகள், கொள்ளைகள், கடத்தல் சம்பவங்கள் நடைபெற்றன என்பதனைக் கணக்கிட்டு பேசப்பட்டு வந்ததே வழக்கமானதாய் இருந்தது. ஆனால் இன்றைய சூழ்நிலை இதற்கு மாறாக, நாட்டில் இவை மிகவும் குறைந்துவிட்ட நிலையில் இவ்விவாதம் நடைபெறுவதனையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

1983ஆம் ஆண்டிலிருந்து இச்சட்டம் தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்து வருகின்றது. இதனோடுகூடவே ஆறாவது திருத்தச் சட்டமும் நடைமுறையில் இருந்து வருகிறது. இவ்விரு சட்டங்களும் எமது நாட்டின் இன்றைய சூழலுக்கு எவ்வளவு தூரம் ஏற்புடையது என்பதனை நோக்குவதற்கு சூழ்நிலையை மிகவும் உன்னிப்பாய் அவதானிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

தற்போது வடகிழக்கில் நிலவுகின்ற அமைதியென்பது நிரந்தரமானதா? தற்காலிகமானதா? அல்லது சாதாரண யுத்த நிறுத்தம் போன்றதா?

டரை வருடகால தலைமறைவு வாழ்க்கைக்குப் பின்பு வெளியில் வந்து விடுத்த முதலாவது அறிக்கையில் சில அம்சங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். கிட்டத்தட்ட ஒருவருட காலமாக ஸ்ரீலங்கா அரசுடன் நாம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி வருகிறோம். இந்தப் பேச்சுக்கள் பரஸ்பர நம்பிக்கையுடன் ஆக்கபூர்வமான முறையில் முன்னேற்றம் கண்டுவருவதனையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சமாதானப் பேச்சுக்களின் பயனாக இன்று தமிழீழத்தில் அமைதியும், சகஜநிலையும் தோன்றியிருக்கின்றது. இன ஒடுக்குமுறையினாலும், இராணுவ அடக்குமுறையினாலும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்பதனை இன்றைய ஸ்ரீலங்கா அரசு உணர்ந்து இருக்கிறது என்பது போலத் தெரிகிறது. இந்த அமைதி நிலை நீடித்து எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதே எமதுவிருப்பம். இது சிங்கள அரசியல் தலைவர்களதும், சிங்கள மக்களது பார்வையையும், அணுகுமுறையையும் பொறுத்திருக்கின்றது. வரலாற்று ரீதியாக எமது மக்களுக்கு இழைக்கப்

திருப்பி அழைத்து நடைமுறையில் தீர்வுக்கான வழியைக்காட்டியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் அரசின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைக்கு வந்து யுத்தநிறுத்தத்தினையும் கடைப்பிடித்து நடைமுறையில் தீர்வுக்கான வழியையும் காட்டி நிற்கிறது. அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்து பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்புகிறது என்கின்ற பொழுதிலும்கூட, தமிழ் பேசும் மக்களுக்கிருக்கின்ற அரசு சார்ந்த நியாயபூர்வமான சந்தேகங்களை நீக்கி நம்பிக்கை ஊட்டுவதற்கான செயற்பாட்டு வடிவங்கள் எதனிலும் அரசு இன்னும் இறங்கியதாக தெரியவில்லை.

அரசு ஆறாவது திருத்தச் சட்டத்தினை நீக்குவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளை புரிந்து கொண்டு காரியமாற்ற தொடங்கி இருக்கின்றது என்பதை நிரூபித்துக்காட்ட முடியும். ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதன் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியும் இதுவே நிரந்தர அமைதிக்கான அடித்தளமாகக் கூட அமையலாம். இந்தச் சபையில் இருக்கின்ற எந்த அரசியல் கட்சியோ, இலங்கை வாழ் எந்தச் சமூகமோ, தனி

மக்களின் உரிமைகள் பற்றியோ, நலன்கள் பற்றியோ, பாதுகாப்பு பற்றியோ எந்த வித அக்கறையும் காட்டாமல் எமது மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய ஆயுதங்களைப்பறித்தெடுக்க வேண்டுமென்பதில் மட்டும் இந்திய அரசு கண்ணும் கருத்துமாக இருந்தது. இந்திய அரசு இழைத்த இமாலயத் தவறுஇது. இந்த தவறுக்கான கசப்பான வரலாற்று அனுபவத்தை இந்தியஅரசு பெற்றுவிட்டது. இந்தியா இழைத்த இந்தப்பெரும் தவறை சிறிலங்கா அரசும் செய்யமாட்டாது என்றே நாம் நம்புகின்றோம்.

சிறிலங்கா ஆயுதப்படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலி வீரர்களுக்கும் மத்தியில் இப்பொழுது போர் நிறுத்தம் நிலவுகின்றது. எனினும் எமது மக்களின் அடிப்படைப்பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு ஏற்படவில்லை. எமது மக்களின் பொருளாதார வாழ்வு சீர்குலைந்த நிலையில் இருக்கிறது, யுத்த அழிவுகளால் எமது கிராமங்களும், பட்டினங்களும் சுடுகாடுபோல காட்சியளிக்கின்றன. எமது மக்களுக்கெதிராக ஏவப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்கள் முற்றாக இன்னும் நீங்கியபாடில்லை. அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மாறிவிடவில்லை. எமது மக்கள் தமது பாதுகாப்புக் குறித்து இன்னும் அஞ்சிய நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த சூழ்நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென சிங்கள இன

**அரசுக்கு விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மூலமே வடகிழக்கில் அமைதியின் தோற்றம் காணப்படுகிறது. கடந்த கால அரசுகள் விட்ட தவறினைப் போல் இல்லாமல் இந்த அரசும் உளப்பூர்வமாக ஓர் அரசியல் தீர்வினை முன்வைத்து தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்காத வரையில் எதிர்காலத்தில் வடகிழக்கில் அமைதி என்பதனை எதிர்பார்க்க முடியாது.**

## ஊர்சுற்றி

### எழுதுவது

பிரதம ஆசிரியர்,
ஈழநாதம்.
14 4-90

தங்களது விலைமதிக்க முடியாத ஒப்பற்ற சேவையை என்னால் மறக்க முடியவில்லை. இறைவன் அருள்புரிவாராக. மக்கள் சேவையே மகேசன் சேவை.

வணக்கம்

அன்புடன்
தி. கந்தையா

ஈழநாதம் பிரதம ஆசிரியருக்கு எழுதிய இந்த அஞ்சல் அட்டை நேற்று என்கைக்குக்கிடைத்தது. யாரோ ஓர் அன்பர் ஈழநாதம் பத்திரிகையின் சேவைக்குப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்திருக்கிறார். அஞ்சல் அட்டையில் இரண்டுவரி எழுதிப் போட்டிருக்கிறார். அவருக்கு மன நிறைவு, முகவரி எதுவும் கிடையாது. கையெழுத்திலிருந்து கொஞ்சம் வயது சென்றவராக இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

சில தினங்களுக்கு முன்னர் ஆசிரிய தலையங்கங்களைப் படித்த ஓர் அன்பர் சுத்தமான ஆங்கிலத்தில் பாராட்டுக் கடிதங்கள் சிலவற்றை எழுதி அனுப்பியிருந்தார், 'மனிதன்' என்று கையெழுத்திட்டிருந்தார்.

பாராட்டும் மனப்பான்மை எல்லோருக்கும் இருப்பதில்லை. பாராட்டுக்களை எழுத்தில் தெரிவிப்பது மிக மிகக் குறைவு.

மண்ணுக்கும் பெண்ணுக்கும் குறைகாண்பது

தமிழர்தான் உள்ளனர். ஆனாலும் அங்கு கடமையாற்றும் தமிழ்ப் பொலிசாருக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதெல்லாம் சிங்களப் பொலிசார்தான்.

இது ஒன்றும் இலங்கையில் புதிய விஷயமல்ல. பொலிஸில் மட்டுமல்ல, ஆயுதப் படைகளிலும் ஏன் அரசாங்க இலாகாக்களிலும்கூட இதேநிலை இன்னமும் நீங்காமலிருக்கிறதென்பதும் உண்மையே.

1956 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்தபோது ஏற்படுத்தப்பட்ட ''அப்பே ஆண்டுவ'' மனப்பான்மை வகுப்புத் துவேஷமாக வளர்ந்து பூதாகாரமாக உருவெடுத்து இன்னமும் அது நீங்கியதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி பிரேமதாசா மும்மொழிகளிலும் அலுவல்கள் நடைபெறவேண்டுமென்று உத்தரவு போட்டாலும் தமிழ் மொழிக்கும் உத்தியோகமொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தாலும் நடைமுறையில் இன்னமும் ''அப்பே ஆண்டுவ'' மனப்பான்மை இருக்கத்தான் செய்கிறது.

1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் முடிந்ததும் நாடு முழுவதும் இனக்கலவரம் வெடித்ததற்குக் காரணமாக இருந்தவர்களே பொலிஸ்காரர்தான்.

இந்தச் சமயத்தில் ''போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்'' என்று கூறிய தர்மிஷ்டரே பின்னர் ஆயுதப்படைகளில் தமது அரசுக்கு எதிரானவர்களும் இருக்கக்கூடும் என்று உண்மையை ஒப்புக்கொண்டார்.

சமீபத்தில் பருத்தித்துறையிலும் மட்டக்களப்பிலும் பொலிசார்செய்த அடாவடித்தனங்களுக்கு தென்னிலங்கை அரசியல்வாதிகளும் கொழும்புப் பத்திரிகைகளும் புலிகள்மீது பழியைப்போட முனைந்தபோது ''பொலிசார் சிலர் செய்த தவறு'' என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா உண்மையைக் கூறியிருந்தார்.

வவுனியா ஒரு எல்லைநகரம். இங்கு அமைதியையும் சாந்தியையும் நிலைநாட்ட வேண்டும். இங்கு வாழும் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதில்தான் நாட்டின் ஒற்றுமையே தங்கியிருக்கிறது.

வவுனியாப் பொலீஸ் நிலையத்திலுள்ள சிங்களப் பொலிசாரின் ''அப்பே ஆண்டுவ'' மனப்பான்மையை மாற்ற வேண்டும். இல்லையேல் அவர்களை அங்கிருந்து முற்றாக அகற்றிவிட வேண்டும்.

முளையிலேயே பிரச்சினையைக் கிள்ளியெறியா விட்டால் பின்னர் வருந்த நேரிடும்.

## மே தினத்தையொட்டி விசேட ரயில் சேவை

(கொழும்பு)

மே தினத்தையொட்டி ரயில்வே திணைக்களம் சில விசேட ரயில் சேவைகளை நடாத்தவுள்ளது.

வட பகுதியில் ரஜரட்ட ரஜனி கடுகதி ரயில் வவுனியாவிலிருந்து சேவையில் ஈடுபடுத்தப்படும். இதில் மேலதிக பெட்டிகள் இணைக்கப்படவுள்ளன.

திருகோணமலையிலிருந்தும் 30ஆம் திகதியும் 1ஆம் திகதியும் கொழும்புக்கு விசேட ரயில் சேவைகள் நடாத்தப்படும்.

## இசை நிகழ்ச்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முற்றவெளி மைதானத்தில் கொழும்பு ''சித்தாரா'' இசைக்குழுவினரின் தெய்வீக ராகங்கள் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

---

நோக்குவதற்கு சூழ்நிலையை மிகவும் உன்னிப்பாய் அவதானிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

தற்போது வடகிழக்கில் நிலவுகின்ற அமைதியென்பது நிரந்தரமானதா? தற்காலிகமானதா? அல்லது சாதாரண யுத்த நிறுத்தம் போன்றதா? என்ற கேள்வி எழுகின்றது. தெறகில் வன்முறைகள் ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் காட்டப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் வடகிழக்கில் மீண்டும் வன்முறைகளையும், பிரச்சினைகளையும், அமைதியின்மையையும் காரணம் காட்டி இச்சட்டத்தினைத் தொடர்ந்து அமுலில் வைத்திருப்பதற்கான சூழல் தோன்றுவதனை நாம் விரும்பவில்லை.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மூலமே வடகிழக்கில் அமைதியின் தோற்றம் காணப்படுகின்றது. கடந்தகால அரசுகள் விட்ட தவறினைப்போல் இல்லாமல் இந்த அரசும் உளப்பூர்வமான ஓர் அரசியல் தீர்வினை முன்வைத்து தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்காத வரையில் எதிர்காலத்தில் வடகிழக்கில் அமைதி என்பதனை எதிர்பார்க்கமுடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் இரண்

> அரசுக்கு விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மூலமே வடகிழக்கில் அமைதியின் தோற்றம் காணப்படுகிறது. கடந்த கால அரசுகள் விட்ட தவறினைப் போல் இல்லாமல் இந்த அரசும் உளப்பூர்வமாக ஓர் அரசியல் தீர்வினை முன்வைத்து தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்காத வரையில் எதிர்காலத்தில் வடகிழக்கில் அமைதி என்பதனை எதிர்பார்க்க முடியாது.

பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதே எமதுவிருப்பம். இது சிங்கள அரசியல் தலைவர்களதும், சிங்கள மக்களது பார்வையையும், அணுகுமுறையையும் பொறுத்திருக்கின்றது. வரலாற்று ரீதியாக எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதிகளையும், தவறுகளையும் சிங்கள மக்கள் நன்குணர்ந்து மனிதநீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும். எமது மக்களுக்கு நீதிவழங்க மறுத்து மீண்டும் எம்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுமானால் நாம் எமது மக்களின் சுதந்திரத்தினையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கும் சிறிதேனும் தயங்கமாட்டோம்.

அறிக்கையின் இவ்வம்சம் சரியான தீர்வு முன்வைக்கப்படாத பட்சத்தில் வடகிழக்கில் என்ன நடக்குமென்பதனை தெட்டத்வெளிவாக கூறுகின்றது என்றேகருதுகிறேன். எனவே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை எதிர்காலத்தில் தீர்க்க அரசாங்கம் ஆயத்தமாக இருக்கின்றது என்பதை நிரூபித்துக்காட்டும் காலகட்டம் இதுவாகும்.

தற்போதைய இந்தியஅரசு இந்தியப்படையின் தோல்வியை ஒப்புக்கொண்டு அதனை செயற்பாட்டு வடிவங்கள் எதனிலும் அரசு இன்னும் இறங்கியதாக தெரியவில்லை.

அரசு ஆறாவது திருத்தச் சட்டத்தினை நீக்குவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளை புரிந்துகொண்டு காரியமாற்ற தொடங்கி இருக்கின்றது என்பதை நிரூபித்துக்காட்ட முடியும். ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதன் மூலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த முடியும் இதுவே நிரந்தர அமைதிக்கான அடித்தளமாகக் கூட அமையலாம். இந்தச் சபையில் இருக்கின்ற எந்த அரசியல் கட்சியோ, இலங்கை வாழ் எந்தச் சமூகமோ, தனி மனிதனோ அமைதியை விரும்பாதவர்களாக இருக்க முடியாது. எனவே இவ் வரலாற்றுக்கடமையானது தனியே அரசுசார்ந்த விடயம் அல்ல. அனைத்து அரசியல் கட்சிகளினதும் கடமையாகும்.

ஆறாவது திருத்தச் சட்டத்தினை வெறுமனே பிரிவினைவாத தடைச்சட்டமாகவோ அல்லது இச்சட்டத்தினை மட்டும் வைத்துக்கொண்டு இந்நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் பாதுகாக்க முடியுமென்றோ நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில் இச்சட்ட மூலத்திற்குள் அடங்கியிருக்கின்ற விடயங்கள் ஓர் இனத்தின் தலைவிதியைப்பற்றியதாகவும் சுயநிர்ணய உரிமைபற்றியதாகவும் இருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கிய மூன்று விடயங்கள் சம்பந்தமாக ஆராயவேண்டியுள்ளது.

1, தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு.
2. குடியேற்றத் திட்டங்கள்.
3. தமிழ் முஸ்லிம் உறவு நிலை பற்றியது.

இதில் முதலாவது விடயம் பற்றிக் குறிப்பிடும் பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் அறிக்கையின் இன்னொரு பகுதியினை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

''எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் வகையில் ஒரு உருப்படியான, நிரந்தரமான அரசியல் தீர்வை முன்வைக்காமல் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு இந்திய அரசு எம்மை நிர்ப்பந்தித்தது. இதனால் ஒரு பெரிய யுத்தமே வெடித்தது. முழு அளவிலான இராணுவ பலத்தை பிரயோகித்தும், ஆயுதங்களை களைந்துவிடும் நோக்கில் இந்திய வல்லரசானது பெரிய தோல்வியைத் தான் சந்தித்தது. நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு இன அழிவை எதிர்கொண்டுவந்தஎமது மக்களின் அடிப்படைப்பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு ஏற்படவில்லை. எமது மக்களின் பொருளாதார வாழ்வு சீர்குலைந்த நிலையில் இருக்கிறது, யுத்த அழிவுகளால் எமது கிராமங்களும், பட்டினங்களும் சுடுகாடுபோல காட்சியளிக்கின்றன. எமது மக்களுக்கெதிராக ஏவப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்கள் முற்றாக இன்னும் நீங்கியபாடில்லை. அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மாறிவிடவில்லை. எமது மக்கள் தமது பாதுகாப்புக் குறித்து இன்னும் அஞ்சிய நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த சூழ்நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென சிங்கள இனவாதபத்திரிகைகள் குரலெழுப்பி வருவதைக்காண வேதனையாக இருக்கின்றது. ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பாமல், எதற்காக எமது விடுதலை இயக்கம் ஆயுதங்களை ஏந்தியது. எதற்காக நாம் பதினைந்து ஆண்டு காலத்திற்குமேலாக ஆயுதப் போராட்டத்தினை நடத்தினோம். இவற்றிற்கான காரணிகள் என்ன என்பதை சிங்கள மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆயுதப் போராட்டம் தோன்றிவளர்ந்த எதார்த்த புறநிலைகளை ஆராய்ந்து பார்த்து, அதன் காரணிகளை நீக்கிவிட உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் ஆயுதப்பிரச்சினை தானாக தீர்ந்துவிடும் அதனை விடுத்து ஆயுதங்களைப் போட்டதும் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் எனக்கருதுவது மிகவும் தவறான கண்ணோட்டமாகும். பூதாகாரமாக வளர்ந்துவிட்ட இனப்பிரச்சினையும் அதனால் எழுந்த சுதந்திர வேட்கையின் புரட்சிகர வெளிப்பாடாகவே ஆயுதப்போர்வடிவம் தோற்றம் கண்டது. ஆகவே, இனப்பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படாதவரை ஆயுதப்பிரச்சினை தீரப்போவதில்லை. இதனை சிறிலங்கா ஆட்சியாளரும், சிங்கள மக்களும் தெளிவாக புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன்.''

இவ்வறிக்கையினை கூர்ந்து கவனித்தால் தீர்வுக்கான முயற்சியில் ''தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு'' பற்றி முக்கியகவனம் செலுத்த வேண்டியுள்ளதை இலகுவாக உணரமுடியும்.

சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்திலிருந்து தமிழ்பேசும் மக்கள் அரசின் குடியேற்றத் திட்டத்தினால் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். குடியேற்றத்திட்டம் என்பது குடி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வேலைவாய்ப்பில்லாத பட்டதாரிகளின் நிலைமை

ஆசிரியர்,
'ஈழநாதம்'

ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படித்த ஆங்கிலப்பட்டதாரிகள் பட்டம் பெற்றும் வேலைவாய்ப்பின்றி இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஆனால் இதே நேரத்

### மக்கள் மடல்

தில் ஓய்வுபெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் ஓய்வூதியம் பெறுவதுடன் பல்கலைக்கழகத்திலும் தொழில் நுட்பக் கல்லூரியிலும் பணிபுரிகிறார்கள்.

ஆனால் இதேவேளையில் தகுதியுடைய இளம் பட்டதாரிகளை இனங்கண்டு வாய்ப்பளிப்பது மேற்படி இரு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஒரு உந்துசக்தியாக அமையும். எனவே இவர்களை இனங்காணுவதே மேற்படி இரு நிறுவனங்களின் கடமைகளுள் முக்கியமாகிறது.

- சி. மகேந்திரலிங்கம்
மட்டுவில் தெற்கு.

---

திலிருந்து கொஞ்சம் வயது சென்றவராக இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

சில தினங்களுக்கு முன்னர் ஆசிரிய தலையங்கங்களைப் படித்த ஓர் அன்பர் சுத்தமான ஆங்கிலத்தில் பாராட்டுக் கடிதங்கள் சிலவற்றை எழுதி அனுப்பியிருந்தார். 'மனிதன்' என்று கையெழுத்திட்டிருந்தார்.

பாராட்டும் மனப்பான்மை எல்லோருக்கும் இருப்பதில்லை. பாராட்டுக்களை எழுத்தில் தெரிவிப்பது மிக மிகக் குறைவு.

மண்ணுக்கும் பெண்ணுக்கும் குறைகாண்பது நமது மண்ணில் பிறந்தவர்கள் பலரிடம் இருந்து வரும் பண்பு. மனிதர்களிடம் குறை குற்றம் காண்பதும் ஊர்வம்பு பேசுவதும் இங்கு இரத்தத்துடன் ஊறிப்போன விஷயம்.

நல்லதைப் பாராட்டும் பண்பு இரண்டொருவரிடம் இருப்பதால் தான் நாடு தப்பிப் பிழைத்திருக்கிறது.

வட்டுக்கோட்டை மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் பற்றி இன்றுள்ள இளம் பிள்ளைகள் பலருக்குத் தெரியாது.

இரண்டாவது யுத்த காலத்தில் மலேசியா, சிங்கப்பூரில் வாழ்ந்து வந்த இலங்கையர் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்ற தகவல் தெரியாமல் இங்குள்ள உறவினர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்த நேரம்.

இரவில் வானொலியில் சிங்கப்பூர், மலேசியாவிலுள்ள தமிழர்கள் பற்றிய விபரம் ஒலிபரப்பப்படும். இந்த விபரத்தை எடுத்து தனது சொந்தச் செலவில் அஞ்சல்அட்டை வாங்கி எழுதி இங்குள்ள அவரவர் உறவினருக்கு அனுப்பிவைத்தவர் மக்கள் கவிமணி.

மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்றால் பாராளுமன்றத்துக்குத்தான் செல்ல வேண்டுமென்றோ ஸ்தாபனங்கள் நிறுவித்தான் ஆகவேண்டுமென்றோ தேவையில்லை.

ஒவ்வொரு மனிதனும் தன்னால் முடிந்த அளவுக்குச் சேவை செய்தாலே போதும் இதற்கும் மனப்பான்மைதான் தேவை.

ஈழநாதம்

## ஆசிய அபிவிருத்தி வங்கி 23ஆவது பொதுக் கூட்டம்

(புதுடில்லி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆரம்பசபையின் 23வது பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 2ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரையும் புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி. விஜயதுங்கா தலைமையிலான தூதுக்குழு இக்கூட்டத்தில் கலந்துகொண்டு இலங்கைக்கு தேவையான உதவிகள் குறித்து பேச்சு நடாத்தவுள்ளது.

இலங்கையில் தற்போது அமைதி நிலவுகிறதாலும், அண்மைக்கால வன்முறைகளால் பாதிக்கப்பட்டவற்றை திருத்தவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியை இலங்கை கோரியுள்ளது.

# மக்களின் ஆதரவால் இந்தியா தோற்றது

# இலங்கை போரிட அஞ்சுகின்றது -சுரேஷ்

(மன்னார்)

எமக்குப் பின்னால் மக்களாகிய நீங்கள் அணிவகுத்து நிற்கின்றீர்கள் இதனால் எம்மோடு போரிட்ட இந்திய அரசு தோற்றது. இலங்கை அரசு அஞ்சுகிறது. இதே போன்று தொடர்ந்து உங்கள் ஆதரவை எமக்கு நீங்கள் அளிக்கவேண்டும் என மன்னார் மாவட்ட அறசியற் பொறுப்பாளர் திரு. சுரேஷ் மன்னாரில் நடைபெற்ற தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் மண்ணை இழந்தோம், உரிமைகளை இழந்தோம், ஆனால் நிலைமை மாறியுள்ளது. எமது போராட்டம் வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், எமது கலாச்சாரத்தை உயிரூட்டுகின்ற நிலை உருவாகின்றது. இந்த நேரத்தில் இங்கு வருகை தந்திருக்கின்ற தேனிசைச் செல்லப்பா அவர்களும் அவரது குழுவினரும் எத்தனையோ கலைஞர்கள் இருந்தும் எமது போராட்டத்தையும், எமது மக்களின் துன்பத்தையும் வெளி உலகுக்கு எடுத்துக் காட்ட எவரும் முன்வரவில்லை. அந்நேரங்களில் எம் நிலைப்பாடுகளை வெளி உலகுக்கு எடுத்துக் காட்டினார் என்றும் இந்திய அரசு எமது போராட்டத்தை சொச்சைப் படுத்தி வந்த நேரத்தில் எதிர்த்துக் குரல் கொடுத்தார். இவரைப் போன்று பல கலைஞர்கள் இங்கு தோன்ற வேண்டுமென்று கூறினார்.

இக்கூட்டத்தை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த மன்னார் மாவட்ட பொறுப்பாளர் சுபன் பேசுகையில்.

நாம் கடந்த காளங்களில் பல அரிய சாதனைகளைப் புரிந்துள்ளோம் பல தியாகங்களைப் புரிந்துள்ளோம் ஆனால் எம் மக்கள் மத்தியிலும் உலகஅரங்கிலும் வெளிக்காட்டாமல் இருந்த தெழவும் அப்படியான கால கட்டத்தில், தேனிசைச் செல்லப்பா எமது சாதனைகளை வெளியுலகுக்கு தமது இசையினால் எடுத்துக் காட்டினார் அது மட்டுமல்லாமல் போராட்டக் காலத்தில், அவர் பாடிய எழுச்சிப்பாடல்கள் எமக்கு மனவலிமையை அளித்தன. இக்கட்டான நேரத்திலும் எமது போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினார்கள். இப்படியான ஒரு மகானின் வருகையால் நாமும் எமது மக்களும் மகிழ்ச்சி அடைகிறோம்.

மாந்தை மேற்குப் பிரஜைகள் குழுத் தலைவர் தனது பேச்சை ஒரு கவிதைபோல நிகழ்த்தினார். அவர் பேசும்போது "வான மழையில்லாத இடத்திற்குக் கான மழை பொழிந்தவனே" எனப் புகழ்ந்து பாடி ஒரு கவிதையுடன் தனது பேச்சை முடித்தார்.

ஆசிரியர் காவேரியான் லெம்வேட் தமதுரையில் தேனிசை செல்லப்பா ஒரு இசைகண்ட மாருதப் பிறவி எனப்பட்டம் வழங்கினார். தொடர்ந்துபேசுகையில் தமிழன் என்றொரு இனமுண்டு. அவனுக்கு என்றொரு நிலமுண்டு. அமுதம் அவனது மொழியாகும். அதுவே அவனது உயிராகும். அதற்காகத் தான் புலிகள் இன்று போராடுகின்றார்கள் என்று கூறினார். தொடர்ந்தும் தேனிசை செல்லப்பாவை வரவேற்று உரையாற்றிக் கலையின்மகிமை பற்றித்தெளிவாக எடுத்துக்கூறி உரையை முடித்தார்.

மன்னார் மகளிர் பிரிவு, கலாசாரப் பிரிவைச் சேர்ந்த செல்வி கிருபா உரையாற்றுகையில் கலையின் மகிமையையும் கலை எவ்வாறு உருவாகிறது என்றும் எமது நாட்டிலும் பல கலைஞர்கள் தோன்ற வேண்டும் எனவும் விளக்கமாக உரையாற்றினார்.

மன்னார் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி யூடி பேசுகையில் தேனிசைச் செல்லப்பா அவர்கள் எமது போராட்டத்தை வெளியுலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காகப் பல பாடல்களைப் பாடியுள்ளார். எனவே இன்றைய நிலையில் எங்காவது நிகழ்ச்சிகள் நடக்குமாக இருந்தால் மேலைய நாட்டு டிஸ்கோவும், கிரேக்குமே இடம் பெறுகின்றன. மீண்டும் எமது கலைப் பாரம்பரியமானது என்றும் புனிதமானதும் எளிமையானதும் என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது என்றும் கூறினார். அப்படியான ஓர் இசையைத்தான் தேனிசைச் செல்லப்பா வழங்குகின்றார் எனக் கூறினார்.

தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி ஆரம்பமாக முன்னர் இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்ற கலைஞர்கள் ஒவ்வொருவரையும் கவிஞர் புதுவை இரத்தினதுரை அறிமுகப் படுத்திவைத்ததைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சி ஆரம்பமாகியது. இந்நிகழ்ச்சியில் பல லட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந்து கண்டு களித்து மகிழ்ந்தார்கள்.

## விவசாயப் பொருட்கள் கொள்வனவு நிலையங்கள்

(கொழும்பு)

விவசாய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்யும் நிலையங்களை நாடு முழுவதும் நிறுவுவதற்கு விவசாய ஆராய்ச்சி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் தோறும் இவை நிறுவப்படும் என விவசாய ஆராய்ச்சித்துறை அமைச்சர் தருமதாசா பண்டா தெரிவித்தார்'

இதன் மூலம் தரகர்களிடம் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்கவும், உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த விலையை பெற்றுக்கொள்ளவும் முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

கொள்வனவு நிலையங்கள் திறக்கப்படுவதுடன் பிரதான நகரங்களில் விற்பனை நிலையங்களும் நிறுவப்படும்.

## நெடுந்தீவிற்கு புதிய பதில் உதவி அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப்பகுதிக்கு புதிதாக பதில் உதவி அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொது எழுதுனர் சேவையில் அதிசிறப்பு பிரிவு நிர்வாக உத்தியோகத்தராக சேவையாற்றிய என். தம்பிப்பிள்ளை நெடுந்தீவு உதவி அரசாங்க பிரிவில் பதில் உதவியரசாங்க அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

இவர் மே மாதம் முதல் வாரமளவில் தமது பதவியை பொறுப்பேற்க உள்ளார்.

(லோ)

## மக்கள் வங்கி கிளையில் நிவாரணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

நாளை மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக்கிளையில் ரூபா 400, ரூபா 1000 கொடுப்பனவுகளை இது வரை காலமும் பெறத் தவறியவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

கடந்த மாசி மாதம் 9, 10, 11, 17, 18, 25ம் திகதிகளிலும் பங்குனிமாதம் 10, 24, 25ம் திகதிகளிலும், சித்திரை மாதம் 7, 8ம் திகதிகளிலும் வழங்கப்படபோது பெறத்தவறியவர்களுக்கு நாளை காலை 9-00 மணிமுதல் நண்பகல் [illegible] களை பெறத்தவறிய கிராம சேவகர்கள் பிரிவுகளான அராலி மேற்கு, அராலி வடக்கு, அராலி தென்மேற்கு, பொன்னாலை, அராலி தென் கிழக்கு, சுளிபுரம் கிழக்கு, மூளாய், சங்கானை மேற்கு சங்கானை தெற்கு, சங்கானை கிழக்கு, தொல்புரம், சங்கரத்தை, வட்டு-மேற்கு, வட்டு கிழக்கு, வட்டு-தெற்கு என்பனவாகும்.

மேற்குறிப்பிட்ட திகதிகளில் பெறத்தவறியவர்கள் மேலும் தாமதியாது நாளைய தினத் [illegible]

## இலங்கைத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் குழுவொன்று பெருந்தொகையான பணத்தைப் [illegible]

## நகரில் நுளம்புத் தொல்லை

(விசேட நிருபர்)

மீண்டும் நகரப்பகுதிகளில் நுளப்புகள் பெருகி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கழிவு நீர் வடிகால்களில் தேங்கி நிற்பதனால் நுளம்பு போன்ற கிருமிகள் பெருகும் அபாயம் தோன்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகத் தொற்று நோய்கள் பரவி வருவதாகவும் உடனடியாக யாழ். மாநகர சபை சுகாதாரப்பகுதியினர் இது விடயத்தில் கவனமெடுக்க வேண்டுமெனவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ். நகரப்பகுதிக்கு கொண்டு வரப்படுகின்ற பதார்த்தங்களின் கழிவுகள் உடனுக்குடன் அகற்றும் வேலைகள் தாமதம் அடைவதனால் நகரப்பகுதி மக்கள் இப்பிரச்சனைகளுக்கு நாளாந்தம் ஈடுகொடுக்க வேண்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது.(21)

## நகைக்கடை,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டம் ரம்ழான் கொண்டாட்டத்தை முன்னிட்டு பின் போடப்பட்டுள்ளது. இக்கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வின்ஸர் தியேட்டரில் நடைபெறும்.

## மாகாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் உள்ளனர்.

பல கல்வி அதிகாரிகளுக்குக் கூட இதுபற்றியசாதக-பாதக நிலை தெரியாதுகைவிரித்துள்ளனர்.

பாடசாலை இரண்டாவது தவணைக்காகத் தொடங்கிய முதல் வாரத்திலேயே இப்படிவங்களை ஒப்படைக்க வேண்டுமென்றும் இப்படிவத்தில் குறிக்கப்பட்ட உத்தியோகத்தரின் முடிவு பின்பு மாற்றமுடியாதது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (41)

## பதவி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி,

களுக்காகக் கமநலச் சேவை அலுவலகங்களுக்கு அலைந்து [illegible]

## கோட்டைக்குள்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது முறைப்பாட்டில் தெரிவித்த தாவது தாம் ஆவலுடன் முதன் முதலாக கோட்டைக்குள் நுழைய முற்பட்ட போது அவ்வழியால் வந்த தமிழ் அதிகாரி ஒருவர், தாம் பாடசாலை சீருடையுடனும் பாடசாலை அடையாள அட்டையுடனும் சென்ற போதிலும் திருப்பி அனுப்பி உள்ளார் என்று கூறினர்.

(லோ)

## சித்தியடைந்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

புலமைப்பரிசிலுக்கான பணத்தினைப் பெறுவதற்கும், பிரபல்யமானதும், பெற்றார் விரும்புவதுமான பாடசாலைகளில் சேரவுமே ஐந்தாம்ஆண்டில் இப்பரீட்சை நடாத்தப்படுவது வழக்கம்.

இந்நிலையிலும், பெற்றார் விரும்பிய பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக திறக்கப்படவிருந்தும் மாணவர்களுக்கு இடம் இன்னும் வழங்கப்படாமையை பல பெற்றார்கள் கல்வி அமைச்சுக்கும், புதிய கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கத்துக்கும் முறையிட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கமைய புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இடம் ஒதுக்கிய பின்பே ஏனைய வெற்றிடங்களை நிரப்பப் பரீட்சை வைக்கலாமென அறிவித்திருந்தும் மேற்கூறிய கல்லூரிகள் முதலில் பரீட்சை நடாத்தி வெற்றிடங்களை நிரப்பி சில வெற்றிடங்களை மட்டுமே புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்காக வெற்றிடமாக உள்ளதாக அமைச்சுக்குக் காட்டியுள்ளதாக அறியவந்துள்ளது.

அமைச்சின் சுற்று நிருபத்துக்கமைய கல்லூரிகள் நடாத்திய பரீட்சையில் பங்கு கொள்ளாது புலமைப் பரிசில் பரீட்சைக்கு மட்டும் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களும், பெற்றோர்களும்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ் பெண்கள் கல்லூரிகளில் நடைபெற்றமை போல் தமக்கும் நீதி வழங்கப்படுமா என அங்கலாய்க்கின்றனர்.

(41)

## யூ. என். எச்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கு வழங்கவுள்ளோம்.

வட கிழக்கு மாகாணசபை வழங்கிய 5 வள்ளங்களும் உள்ளன. இவற்றை வெறுமனே மீனவர்களுக்கு வழங்குவதால் எதுவித பிரயோசனமும் இல்லை. ஆதலால் ஜனசவிய [illegible]

முழுவதும் நிறுவுவதற்கு விவசாய ஆராய்ச்சி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் தோறும் இவை நிறுவப்படும் என விவசாய ஆராய்ச்சித்துறை அமைச்சர் தருமதாசா பண்டா தெரிவித்

ட்களுக்கு சிறந்த விலையை பெற்றுக்கொள்ளவும் முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

கொள்வனவு நிலையங்கள் திறக்கப்படுவதுடன் பிரதான நகரங்களில் விற்பனை நிலையங்களும் நிறுவப்படும்.

அளித்தன. இக்கட்டான நேரத்திலும் எமது போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினார்கள். இப்படியான ஒரு மகானின் வருகையால் நாமும் எமது மக்களும் மகிழ்ச்சி அடைகிறோம்.

மாந்தை மேற்குப் பிரஜைகள் குழுத் தலைவர் தனது பேச்சை ஒரு கவிதைபோல நிகழ்த்தினார். அவர் பேசும்போது "வான மழையில்லாத இடத்திற்குக் கான மழை பொழிந்தவனே" எனப் புகழ்ந்து பாடி ஒரு கவிதையுடன் தனது பேச்சை முடித்தார்.

யில் தேனிசைச் செல்லப்பா

களித்து மகிழ்ந்தார்கள்.

## நெடுந்தீவிற்கு புதிய பதில் உதவி அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப்பகுதிக்கு புதிதாக பதில் உதவி அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொது எழுதுனர் சேவையில் அதிசிறப்பு பிரிவு நிர்வாக உத்தியோகத்தராக சேவையாற்றிய என். தம்பிப்பிள்ளை நெடுந்தீவு உதவி அரசாங்க பிரிவில் பதில் உதவியரசாங்க அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

இவர் மே மாதம் முதல் வாரமளவில் தமது பதவியை பொறுப்பேற்க உள்ளார்.

(லோ)

## காத்தான்குடியில் ரம்ழான் விமரிசையாக கோண்டாட்டம்

(காத்தான்குடி)

பல வருடங்களின் பின்னர் காத்தான்குடிப் பிரதேசத்தில் அமைதியாகவும், சிறப்பாகவும் நேற்று ரம்ழான் பெருநாள் கொண்டாடப்பட்டது. அதேவேளை காத்தான்குடியில் மட்டக்களப்புப் பிரதான வீதியிலுள்ள கடைகளில் சனநடமாட்டம் அதிகமாக இருந்ததனால் இப்பிரதேச விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் ஜனாப் இம்ரான் விசேட போக்குவரத்து வசதிகளைச் செய்ததோடு, விசேட பாதுகாப்பு ஒழுங்குகளையும் செய்திருந்தார்.

மேலும்பள்ளிவாசலில் நேற்று முன்தினம் நள்ளிரவிலிருந்து நேற்று நண்பகல் வரை ஜூம்மாத் தொழுகையும் ஒழுங்கான முறையில் மத வழிபாடுகளும் இடம்பெற்றன.

சிறுவர்கள் வெடிகளைக் கொளுத்திப் பெருநாளை மிக மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்கள்.

அதேவேளை பக்தீரீயா ஜூம்மாப் பள்ளிவாசலில் காணிக்கையுண்டியல் திறந்து வைக்கப்பட்டது. நேற்றுக் காணிக்கையாக ஏறத்தாழ 1500 ரூபா வரையில் சேர்ந்ததாகவும் தெரியவருகின்றது.

## ரைம்ஸ் மீது அரசாங்கம் வழக்குத் தொடரும்

(கொழும்பு)

அரச தலைவர்களை அவதூறு படுத்தும் வகையில் கட்டுரை ஒன்றை வெளியிட்டதாக அமெரிக்காவில் இருந்து வெளிவரும் ரைம்ஸ் சஞ்சிகைமீது வழக்குத் தொடர அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின், நேற்று முன்தினம் அமைச்சரவைப் பேச்சாளர் ரஞ்சன் விஜெரெட்ணா பத்திரிகையாளர் மகாநாட்டில் எழுதி வாசித்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்

"செய்தியாளர்களுக்குத் துப்பாக்கி வேட்டுக்கள்" என்ற மகுடமிட்டு ஏப்பிறல் 23, 1990-இல் ரையிம்ஸ் சஞ்சிகையில், புது டெல்கியிலிருந்து எட்வேட் டபிளியு. டெஸ்மண்டும், அனித்தா பிரதாப்பும் எழுதிய கட்டுரை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இக்கட்டுரையில் தவறான கணிப்புகளின் அடிப்படையில் பிழையான கருத்துக்கள் உள்ளன. இது அரசாங்கத் தலைவர்களை அவதூறாகக் கூறுவதுபோல் அமைகிறது.

தொடர்ந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும், சட்ட ஆலோசனை பெறுவதற்காகவும் இக்கட்டுரை அரசாங்க சட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இலங்கைத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் குழுவொன்று பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக்கொண்டு இலங்கையர்களை சில ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கும் வேலையில் ஈடுபட்டு வருவதாக நோர்வே நாட்டைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் மோசடிக் கப்பல் கம்பனி 19 இலங்கையர்களைப் பாரிஸ்க்கு அனுப்பி,அங்கிருந்து நோர்வே அல்லது வேறு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல விசாவுக்கு முயற்சித்துள்ளார்கள் என்றும், இந்த மோசடியில் நோர்வே நாட்டில் உள்ள போலி ஏஜெண்டுகளின் பங்களிப்பு பற்றித்தாம் விசாரிக்க உள்ளதாகப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இத்தகவல் கொழும்புக்கும் அனுப்பப்பட உள்ளதாம்.

பொலிஸ் அதிகாரி மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சமீபத்தில் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் நோர்வேயில் புகலிடம் கோரும் நோக்கத்துடன் பிரான்ஸ் நாட்டிலிருந்து கப்பலொன்றில் அடித்தட்டில் பதுங்கிய நிலையில் நோர்வே நாட்டுக்கு வந்துள்ளார் என்றார். இவர் ஒரு கப்பல் ஏஜென்சியின் ஆலோசனையின் பேரில் இப்படிச் செய்தாரென்றும் இவரைப் பிரான்சுக்கே திருப்பி அனுப்பி விட்டார்கள் எனப் பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

நோர்வே நாட்டுக்குள் வர விரும்பும் ஈரானியர், இலங்கையர், லெபனானியர் கட்டாயமாக விஸா வைத்திருக்க வேண்டும் என்றும், இல்லாது போனால் அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்படுவார்கள் எனறு ஒஸ்லோ ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது:

## மக்கள் வங்கி கிளையில் நிவாரணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

நாளை மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக்கிளையில் ரூபா 400, ரூபா1000 கொடுப்பனவுகளை இதுவரை காலமும் பெறத் தவறியவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

கடந்த மாசி மாதம் 9, 10, 11, 17, 18, 25ம் திகதிகளிலும் பங்குனிமாதம் 10, 24, 25ம் திகதிகளிலும், சித்திரை மாதம் 7, 8ம் திகதிகளிலும் வழங்கப்படபோது பெறத்தவறியவர்களுக்கு நாளை காலை 9-00 மணிமுதல் நண்பகல் 12-00மணிவரை மேற்படி வங்கியில் வழங்கப்பகிடுன்றன.

இதுவரையும் நிவாரணமளை பெறத்தவறிய கிராம சேவகர்கள் பிரிவுகளான அராலி மேற்கு, அராலி வடக்கு,அராலி தென்மேற்கு, பொன்னாலை, அராலி தென் கிழக்கு, சுளிபுரம் கிழக்கு, மூளாய், சங்கானை மேற்கு சங்கானை தெற்கு, சங்கானை கிழக்கு, தொல்புரம், சங்கரத்தை, வட்டு-மேற்கு, வட்டு கிழக்கு, வட்டு-தெற்கு என்பனவாகும்.

மேற்குறிப்பிட்ட திகதிகளில் பெறத்தவறியவர்கள் மேலும் தாமதியாது நாளைய தினத்தில் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## பொருளாதார விருத்தியில் ஆர்வமுள்ளோருக்கு பயிற்சி

தமிழீழ கிராமங்களின் பொருளாதார அபிவிருத்தியை கருத்தில் கொண்டு சிலதுறைகளில் ஆர்வமுள்ளவர்களுக்கு வெளிநாட்டிலும், தமிழீழத்திலும் பயிற்சியளிக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி ஐம்பது பேருக்கு பயிற்சி அளிக்க பின்வரும் சிறப்பு பயிற்சி பாடத்திட்டமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

பாசன மேலாண்மை - பாசன வளர்ச்சி வரலாறு, மண் மாதிரி எடுத்தல் மண்வளம் சோதனை செய்வதில் எளிய முறைகள் செய்விளக்கம், பாசன முறைகள், தெளிப்பு நீர்ப்பாசனம்,கொட்டுநீர்ப்பாசனம், விவசாயத்துக்குபயன்படுத்தப்படும்சக்திகள்காற்றாலைசூரியசக்தி, நெல், கரும்பு, வாழை, பருத்தி, கடலை, சாகுபடி நுணுக்கங்கள், தோட்டக்கலை, காய்கறிகள் பழவகைகள், மலைத்தோட்டப்பயிர்.

வனப்பயிர்கள், சமூகக் காடுகள், எரிபொருளுக்கான மரங்கள் முதலியன காளான் வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழியும் மீனும் இணைத்து வளர்த்தல், தோட்டமும் மீன்வளர்ப்பும் இணைந்து செய்தல் பாசன அமைப்புக்கள் பராமரிப்புக்கள் குடிமராமத்து விவசாய அமைப்புகள், தோண்டு கிணறுகள், ஆழ்துணைக் கிணறுகள் அமைத்தலும் பராமரித்தலும் அதற்குத் தேவையான நீர் இயக்கு இயந்திரங்கள் என்பனவே.

இதில் ஆர்வமுள்ள அனைவரும் (ரூற்) நிறுவனத்துடன் தலைமைக் காரியாலயம், 207 இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1350 வீடுகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 105 வீடுகளுள் 51 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 83 வீடுகளுள் 44 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 33 வீடுகளுள் 13 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 71 வீடுகளுள் 08 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 134 வீடுகளுள் 46 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 47 வீடுகளுள் 18 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் ரிவில் ஆரம்பிக்கப்பட்ட 33 வீடுகளுள் 12 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. (61)

## மாகாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் உள்ளனர்.

பல கல்வி அதிகாரிகளுக்குக் கூட இதுபற்றியசாதக-பாதக நிலை தெரியாதுகைவிரித்துள்ளனர்.

பாடசாலை இரண்டாவது தவணைக்காகத் தொடங்கிய முதல் வாரத்திலேயே இப்படிவங்களை ஒப்படைக்க வேண்டுமென்றும் இப்படிவத்தில் குறிக்கப்பட்ட உத்தியோகத்தரின் முடிவு பின்பு மாற்றமுடியாதது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (41)

துக்கமைய கல்லூரிகள் நடாத்திய பரீட்சையில் பங்கு கொள்ளாது புலமைப் பரிசில் பரீட்சைக்கு மட்டும் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களும், பெற்றோர்களும்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ் பெண்கள் கல்லூரிகளில் நடைபெற்றமை போல் தமக்கும் நீதி வழங்கப்படுமா என அங்கலாய்க்கின்றனர். (41)

## பதவி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி,

களுக்காகக் கமநலச் சேவை அலுவலகங்களுக்கு அலைந்து திரிகின்றனர்,

யாழ் கமநலசேவை காரியாலயத்தில் சேவைபுரிந்த 30 ஆண்களும் 18பெண்களும் தற்சமயம் கிராம சேவையாளர்களாக நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யூ. என். எச்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கு வழங்கவுள்ளோம்.

வட கிழக்கு மாகாணசபை வழங்கிய 5 வள்ளங்களும் உள்ளன. இவற்றை வெறுமனே மீனவர்களுக்கு வழங்குவதால் எதுவித பிரயோசனமும் இல்லை. ஆதலால் ஜனசவிய திட்டத்தின் மூலம் கடனாகப் பணத்தைப் பெற்று அப்பணத்தில் மீன்பிடி வலைகளை வாங்கி வறிய மீனவர்களுக்கு வள்ளங்களுடன் வலையையும் சேர்த்து வழங்கவுள்ளோம் என்றார். (த)

## சகல மக்களும்

(5 ஆம் பக்கத்தொடர்ச்சி)

யேற்றவாசிகளின் எண்ணிக்கையை பொறுத்த விடயமன்று. இது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் குடியமர்த்தப்படுதல், பயிர்ச் செய்கைக் காரணிகள் ,நீர்ப்பாசன வாய்க்கால்கள், குளங்கள், தொழிற்சாலைகள் போன்ற உற்பத்திச் சாதனங்கள் திடீரென வந்து குடியேறியவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வருவதினால் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தவர்கள் இதனால் பாதிக்கப்படுதல் என்பதே முக்கிய பிரச்சனையாகின்றது. ஒரு இனத்தின் அடையாளத்தினை அழிக்கின்ற விடயத்தில் அரசு அசிரத்தையாக இருந்தால் வழிவழியே வருகின்ற இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பது திசை திரும்பிவிடும் ஆபத்துக் கூட ஏற்படலாம்.

தமிழீழ முஸ்லிம் மக்களின் உறவைப் பொறுத்தவரையில் சில காலமாக கிழக்கில் பரஸ்பரம் சந்தேகப்பார்வையே நிலவிவருகின்றது. கடந்த காலங்களில் இருந்த எந்தவொரு அரசியல்சக்தியும் தங்களுடைய குறுகிய அரசியல் நலன்களுக்காக இவ்விரு சமூகங்களினதும் உறவை வலுப்படுத்துவதற்கு பதிலாக முறியடித்தே வந்துள்ளனர் என்பதற்கு வரலாறு சாட்சி பகர்க்கின்றது. இனப்பிரச்சனைக்கான முழுமையான தீர்வு என்பது இவ் இரு சமூகங்களினதும் ஐக்கியத்திலேயே தங்கியுள்ளது. எனவே எங்கே ஐக்கியம்குலைகின்றது. என்பதனைப் பார்த்திருந்து பயன்படுத்தும் உபாயத்தினை கைவிட்டு இவ்வுறவுபிரிந்துபோக வேண்டிய உறவு அல்ல ஐக்கியப்படவேண்டிய உறவு என்பதனை அனைத்து சக்திகளும் உணர்ந்து செயலாற்ற வேண்டும். தேசிய இனப்பிரச்சினைத் தீர்வின்போது வடகிழக்கில் வாழும் முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் அவசியமாகும்.

இம்மூன்று பிரச்சனைகளையும் தீர்க்கவிரும்பும் அரசானது முதலில் ஆறாவது திருத்தச்சட்டத்தினை நீக்குவதன் மூலம் நம்பிக்கையான சமிஞ்ஞை காட்ட முடியும்.

ஆறாவது திருத்தச்சட்டம் நீக்குவதுதொடர்பாக பெரும்பான்மை வாக்குகள்பெறுதல் என்பதில் சில சமயங்களில் நடைமுறை சிக்கல்கள் ஏற்படலாம். ஆனால் சகல எதிர் கட்சிகளும், ஆளும் கட்சியும் இந்த விடயத்தில் ஒன்றிணைந்து தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணுகின்ற பணியில் ஒத்துழைத்து இந்நாட்டின் அனைத்து மக்களுக்கும் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதில் தடைக்காரணிகளாக உள்ள வற்றைதகர்த்தெறிந்து வரலாற்றுக்கு பெருமை சேர்க்கவேண்டும் இந்த விடயத்தில் அரசியல் நிறங்களை முன்னணிப்படுத்தி பிரிந்து நின்று வேடிக்கை காட்டுவது எந்தச்சிங்களபெரும்பான்மை அரசியல் கட்சிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வை விரும்பவில்லை என்கின்ற தேசியவரலாற்றுப்பணியினை சுமக்கநேரிடும் என்று கூறி முடிக்கிறேன்.